வானவில்

VAANAVIL

இதழ் 120 மார்கழி 2020

ISSUE 120 DECEMBER 2020

# தோட்டத் தொழிலாளர்களின் 1,000 ரூபா சம்பளக் கோரிக்கை உடன் நிறைவேற்றப்பட வேண்டும்!



மலையக பெருந்தோட்டத் தொழிலார்களின் நாள் சம்பளத்தை 1,000 ரூபாவாக அதிகரிப்பது என்ற பிரச்சினை கடந்த ‘நல்லாட்சி’ அரசாங்கத்தின் காலத்தில் ஆரம்பித்து தற்போதைய அரசாங்கம் வரை தொடர்கதையாக நீடிக்கின்றது.

கடந்த அரசாங்கத்தில் முற்போக்கு கூட்டணி என்ற மலையகத் தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அத்தனை கட்சிகளும் அரசில் அங்கம் வகித்தன. அவற்றின் தலைவர்கள் சிலர் அமைச்சர்களாகவும் பதவி வகித்தார்கள். அது மாத்திரமின்றி, ஐக்கிய தேசியக் கட்சியின் தோட்டத் தொழிற்சங்கமான தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கமும் இருந்தது.

இத்தனை பேர் இருந்தும் தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,000 ரூபா நாள் சம்பளம் பெற்றுக்கொடுக்க முடியாமல் போய்விட்டது. இவ்வளவுக்கும் பெரும்பாலான தோட்ட முதலாளிமார் ஐ.தே.கவின் ஆதரவாளர்கள். அது மாத்திரமின்றி, மலையகத் தோட்டத் தொழிலாளர்களில் பெரும்பாலோர் பாரம்பரியமாக ஐ.தே.கவுக்கே வாக்களித்தும் வருபவர்கள்.

இருந்தும் தோட்ட முதலாளிகளை 1,000 ரூபாவை நாள் சம்பளமாக வழங்குவதற்கு சம்மதிக்க வைப்பதற்கு ஐ.தே.க. தலைமையிலான அரசாங்கத்தால் முடியாமல் போய்விட்டது. ஆனால் கடந்த அரசாங்கத்தை கிடுக்கிப் பிடிபிடித்து 1,000 ரூபா சம்பளத்தை தொழிலாளர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கான சூழ்நிலை இருந்தது.

ஏனெனில், கடந்த அரசாங்கம் போதிய பெரும்பான்மை இல்லாத நிலையிலேயே ஆட்சி செய்தது. மலையகக் கட்சிகளின் ஆதரவு மாத்திரமின்றி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. என்பனவற்றின் மறைமுக ஆதரவுடனும்தான் கடந்த அரசாங்கம் ஆட்சியைக் கொண்டிழுத்தது. எனவே, இந்தக் கட்சிகள் திடமாக நின்று அரசாங்கத்துக்கு நிர்ப்பந்தம் கொடுத்திருந்தால், ஐ.தே.க. தனது ஆட்சியைக் காப்பாற்றுவதற்காகத் தன்னும் தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தை ஒரு வழிக்குக் கொண்டு வந்து 1,000 ரூபா சம்பளத்தைப் பெற்றுக் கொடுத்திருக்கக்கூடும். ஆனால் அரசை ஆதரித்த கட்சிகள் அவ்வாறு செய்யவில்லை. அது அவர்கள் செய்த மாபெரும் தவறு.

தமிழ் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தமட்டில் அது மலையக மக்கள் பிரச்சினையை எப்பொழுதோ கைகழுவி விட்டுவிட்டது. தமிழரசுக் கட்சி தொடங்கப்பட்ட ஆரம்ப காலங்களில் அதன் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் 35 இலட்சம் தமிழ் பேசும் மக்களின் தலைவர் என்று வர்ணிக்கப்பட்டு வந்தார். வடக்கு கிழக்குத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள், முஸ்லீம் மக்கள் ஆகியோரே அந்த 35 இலட்சம் பேரும்.

மலையகத் தோட்டத் தொழிலாளர்களை அணி திரட்டுவதற்காக ‘இலங்கைத் தொழிலாளர் கழகம்’ என்ற தொழிற்சங்கம் ஒன்றையும் தமிழரசுக் கட்சி தொடங்கி சில காலம் நடத்தியது. ஆனால் அது மலையகத்தில் எடுபடவில்லை. ஆரம்ப காலத்தில் தமிழரசுக் கட்சியை ஆதரித்த கிழக்கிலங்கை முஸ்லீம்கள் சிலர் தமிழரசுக் கட்சி சார்பாகத் தேர்தல்களில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் தெரிவானார்கள்.

ஆனால், தமிழிரசுக் கட்சித் தலைமை தொடர்ந்தும் யாழ்ப்பாண மேட்டுக்குடி மையவாதக் கொள்கைகளைப் பின்பற்றியதால் முஸ்லீம்களும் மலையகத் தமிழர்களும் தமிழரசுக் கட்சியில் நம்பிக்கை இழந்து அதைவிட்டு ஒதுங்கிவிட்டனர். பிற்காலத்தில் தமிழரசுக் கட்சியினர்

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க…

**நூறு சிந்தனை மலரட்டும்**

# டெல்லியில் விவசாயிகளின் மாபெரும் போராட்டம்

கடந்த செப்ரம்பரில் இந்திய பாராளுமன்றத்தில் 3 வேளாண் சட்ட மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன. இதையடுத்து எதிர்க்கட்சிகள் இச்சட்டங்கள் விவசாயிகளுக்கு எதிரானது, கார்ப்பரேட்களுக்கு, தனியார்களுக்கு சாதகமானது, விவசாயத்தை அழிப்பது, நாட்டின் உணவுப்பாதுகாப்பை ஒழிப்பது என்று கூறி அமளி துமளியில் ஈடுபட்டனர். பாரதிய ஜனநாயகக்கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சியான சிரோமணி அகாலிதளத்தைச் சேர்ந்த, உணவு பதப்படுத்துதல் தொழிற்துறை பெண் அமைச்சரான ஹர்சிம்ரத்கவுர் பாதல், 'ஆயிரக்கணக்கான விவசாயிகள் வீதிகளில் போராடிக்கொண்டு இருக்கிறார்கள். விவசாயிகளின் அச்சங்களுக்கு தீர்வு காணாமல் சபைகளில் மசோதாக்கள் நிறைவேற்றப்பட்ட அரசாங்கத்தின் ஒரு பகுதியாக நான் இருக்க விரும்பவில்லை' என்று கூறி தனது பதவியை ராஜினாமா செய்து பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்போது இந்திய மத்திய அரசு கொண்டு வந்துள்ள இந்த மூன்று மசோதாக்களையும் மீளப் பெறக்கோரி, டெல்லியில் விவசாயிகள் நவம்பர் 26ந் திகதியிலிருந்து தொடர் போராட்டம் ஒன்றினை மேற்கொண்டு வருகிறார்கள். பஞ்சாப், ஹரியானா, உத்ரகாண்ட், உத்தரப்பிரதேசம், தெலுங்கானா போன்ற மாநிலங்களில் இருந்தும் டெல்லியை நோக்கி வந்த விவசாயிகளுக்கு, நகர எல்லையிலுள்ள பிரதான நெடுஞ்சாலைகள் அடைக்கப்பட்டுள்ளதால், அங்கேயே அமர்ந்து அவர்கள் போராட்டத்தை நடத்தி வருகிறார்கள்.

விவசாயிகளின் தொடர் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில், மத்திய அரசு நடத்திய பல்வேறுகட்ட பேச்சுவார்த்தைகளும் தோல்வியில் முடிவடைந்துள்ளது 'வேளாண் சட்டங்களை அரசு திரும்பப்பெறும் வரை போராட்டம் தொடரும்' என்று விவசாயிகளும் உறுதியாக இருக்கிறார்கள். போராட்ட களத்தில் இருக்கும் விவசாயிகளுக்கு நாடு முழுவதிலுமிருந்து ஆதரவு பெருகி வருகிறது. டெல்லி மாநிலம் 3 சட்டங்களையும் நிராகரித்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. பஞ்சாப் டி.ஐ.ஜி. லக்மிந்தர் சிங் ஜாகர் தன் பதவியை ராஜினாமா செய்வதாகக் கடிதம் அளித்துள்ளார். திரைப்படத் துறையினர், விளையாட்டு வீரர்கள் மற்றும் பத்மஸ்ரீ விருது பெற்ற கவிஞர் சுர்ஜித் பட்டார் போன்றோர் தங்கள் விருதுகளை அரசுக்குத் திருப்பியளித்து, போராடும் விவசாயிகளுக்குத் தங்களுடைய ஆதரவைத் தெரிவித்து வருகின்றனர். சந்த் பாபா ராம் சிங் என்ற 65 வயதான சீக்கிய மதகுரு 'விவசாயிகளின் வலியைத் தாங்க முடியவில்லை' என்று எழுதி வைத்துவிட்டு தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துள்ளார். இதைவிட போராட்டத்தில் இதுவரையில் 20 விவசாயிகள் உயிரிழந்துமுள்ளனர்.

இந்திய பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 3 வேளாண் சட்ட மசோதாக்கள் பின்வருமாறு:

1. அத்தியாவசியப் பொருள் சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்து விலைகள் கட்டுப்பாட்டைத் தளர்த்தி, சில பொருட்கள் அளவில் அதிகமாக விற்கப்படுவது அத்தியாவசியப் பொருளாகக் கொள்ளப்படும்.

2. ஒப்பந்த வேளாண்மைக்கு அனுமதி மற்றும் வசதி செய்து கொடுத்தல்

3. ஏ.பி.எம்.சி (APMC - Agriculture Produce Marketing Committees) என்று அழைக்கப்படும் வேளாண் விளைபொருள் சந்தை கமிட்டிக்களின் எல்லைக்கு வெளியே தனியார் சந்தைகளை நிறுவுவது.

1வது சட்டம்: வெங்காயம், உருளைக்கிழங்கு, பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள், உணவு தானியங்கள் போன்றன இனிமேல் அத்தியாவசியமான பொருட்கள் என்று கிடையாது. எனவே பெரிய நிறுவனங்கள், இந்தப் பொருட்களை அளவுக்கதிகமாக வாங்கி இருப்பு வைத்துக்கொள்ளும். சந்தையில் இந்தப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுகையில், தங்களிடமுள்ள பதுக்கலில் இருந்து அதிக விலைக்கு சந்தையில் விற்று, கொள்ளை இலாபம் சம்பாதிக்கும். அதாவது பெரிய நிறுவனங்கள் இதுவரை பயந்து பயந்து செய்துவந்த பதுக்கல் மற்றும் மறைமுக ஏற்றுமதி மோசடிகளை, வெளிப்படையாகச் செய்வதற்கு இந்தப் புதிய சட்டம் அங்கீகாரம் அளிக்கிறது

2வது சட்டம்: பெரிய நிறுவனங்கள் விவசாயிகளோடு விலைகளை முற்கூட்டியே ஒப்பந்தம் செய்துகொண்டு, விளைபொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கான அடிப்படை வசதிகளை இந்தச் சட்டம் செய்து தருகிறது. இதன் மூலம் சொந்த நிலத்திலேயே விவசாயிகள் கூலிகளாக்கப்படுவார்கள்.

3வது சட்டம்: ஏ.பி.எம்.சி என்று அழைக்கப்படும் தற்போது நடைமுறையிலுள்ள மண்டி முறையை ஒழித்து, தனியார் வர்த்தகர்களே விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களின் விலைகளை நிர்ணயிப்பார்கள். ஏ.பி.எம்.சி முறையில் விவசாயப் பொருட்களை வர்த்தகர்கள் மண்டியில் ஏலம் எடுப்பார்கள், அதிகவிலை கொடுக்க முன்வருபவர்களுக்கு விற்கப்படும். ஆனால் தனியார் மண்டிகளில் இந்த முறை கிடையாது.

விவசாயிகளிடம் விளைபொருட்களைக் கொள்முதல் செய்து சேமிப்பதற்காக அதானி குழுமத்தின் ADANI Agri Logistics Pvt Ltd இந்தியா முழுவதும் 14 இடங்களில் இராட்சத Silo க்களை நிறுவியுள்ளது. 8,75,000 மெட்ரிக் தொன் கொள்ளளவு கொண்ட இந்த நவீன தானிய சேமிப்புக் களஞ்சியங்கள் Cement Base and scalvanizing metal முறையில் தயாரிக்கப்பட்டது. இவற்றுள் நெல், அரிசி, கோதுமை, பருப்பு வகைகள் என அனைத்து பொருட்களையும் நீண்ட காலத்திற்கு சிறிதும் சேதமின்றி சேமித்து வைக்கலாம். இனிமேல் இந்தியாவில் உணவுப் பொருட்களை வாங்கவோ விற்கவோ அதானி குழுமத்திடம்தான் கையேந்த வேண்டி வரும்.

இந்தியாவின் விவசாய விளைபொருள் சந்தை மிகப்பெரியது. இந்திய ரூபாயில் ஏறத்தாழ 16,58,700 கோடி புரளும் துறை. 55 வீதமான மக்கள் இந்தியாவின் வேளாண்மையை நம்பியே இருக்கிறார்கள் இன்று இவ்வளவு பெரிய சந்தையை அதானி போன்ற பன்னாட்டு அமைப்புகளுக்கு மோடி அரசு திறந்து விட்டிருக்கின்றது. பல இலட்சக்கணக்கான விவசாயிகள் கடும் குளிரையும் பொருட்படுத்தாது திறந்தவெளியில், இரவும் பகலும் உட்கார்ந்து இதற்கெதிராக வீரத்துடன் போராடிக்கொண்டு இருக்கிறார்கள். இது இந்திய வரலாற்றில் விவசாயிகளின் மிக நீண்டதொரு போராட்டமாக இருக்கும். இதன் மூலம் விவசாயிகள் யார் என்பதை நிரூபிப்பார்கள் என்பதை நிட்சயமாக நம்பலாம்.

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்:

**வானவில்**

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ **இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.**

# செந்தமிழ் மண்ணில் செங்கொடி இயக்கம்!

**(சென்ற இதழின் தொடர்ச்சி)**



**அ**ந்நிய துணி புறக்கணிப்பு போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்த தோழர் பி.ராமமூர்த்தியைச் சந்தித்து பேசி அவரும் கம்யூனிஸ்ட் இயக்கத்தின்பால் ஈர்க்கப்பட்டார். பெங்களூரில் தங்கியிருந்த பி.சுந்தரய்யாவைச் சந்தித்து கம்யூனிஸ்ட் கட்சியின் முழுநேர ஊழியராக மாற்றினார்.

இந்த நிலையில் அமீர் ஹைதர் கானை தீவிரமாக தேடிய காவல்துறை அவரை கைது செய்து சென்னை மத்திய சிறைச்சாலையின் தனிமைச் சிறைச்சாலையில் அடைத்தது. சிறையில் அடைக்கப்பட்டிருந்த விடுதலைப் போராட்ட வீரர்களோடோ, பிற கைதிகளோடோ சந்திக்க அனுமதிக்கப்படவில்லை. உண்ணாவிரதம் உள்ளிட்டு பல கட்டப் போராட்டங்களை நடத்திய பின்பு அந்த சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த சுபாஷ் சந்திரபோஸ் தலையீட்டின் பேரிலேயே மற்றவர்களோடு பழகுவதற்கு அனுமதிக்கப்பட்டது. சக சிறைவாசிகளோடு காந்தியின் போராட்ட முறை உள்ளிட்ட பல விஷயங்கள் பற்றி கடுமையாக விமர்சித்தார்.

துடிப்புள்ள இளம் போராட்ட வீரர்கள் ஹைதர்கானின் பேச்சில் ஈர்க்கப்பட்டனர். அப்போது சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த பி. சீனிவாசராவை சந்தித்துப் பேசி கம்யூனிச புத்தகங்களை படிக்கச் செய்து கம்யூனிஸ்ட்டாக மாற்றப்பட்டார். பிறகு 18 மாத சிறைத்தண்டனைக்குப் பிறகு ஹைதர் கான் விடுதலை செய்யப்பட்டார்.

**பிரிட்டிஷ் அரசு ஆத்திரம்**

விடுதலைப் போராட்டத்தில் சிறை சென்ற இளைஞர்கள் பலர் ஹைதர்கானின் பேச்சில் கவரப்பட்டு கம்யூனிச சிந்தனையில் ஈர்க்கப்பட்டிருந்த நேரத்தில் பிரிட்டிஷ் அரசு கம்யூனிஸ்ட்டுகளை அழித்தொழிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு 1933ம் ஆண்டு ராஜதுரோக வழக்கை பதிவு செய்து 20 பேரை கைது செய்தது. இவர்கள் மீது அதிகாரிகளை கொலை செய்வது, அரசாங்க கஜானாக்களை கொள்ளையடிப்பது உள்ளிட்ட மோசமான குற்றச்சாட்டுக்கள் பொய்யாக பதிவு செய்யப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்களில் முகுந்தலால் சர்க்கார், அருணாசலம், கோபால் சாஸ்திரி, டி.ஆர். சுப்பிரமணியம் உள்ளிட்ட பலர் மீது இந்த வழக்கு தொடுக்கப்பட்டது. இந்த வழக்கில் கைது செய்யப்பட்டவர்களுக்கு தீவிர காங்கிரஸ் ஊழியராக இருந்த பி.ராமமூர்த்தி, வழக்கறிஞர் மூலம் உதவிகளை மேற்கொண்டு வந்தார். விசாரணை முடிவில் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு இரண்டாண்டுகள் முதல் ஆறு ஆண்டுகள் வரை கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

வழக்கு விசாரணைக்கு உதவி செய்த பி.ராமமூர்த்தி கம்யூனிச புத்தகங்களை படித்து படிப்படியாக மார்க்சிய சிந்தனைக்கு ஈர்க்கப்பட்டார். இந்த சூழ்நிலையில் மீண்டும் ஹைதர் கான் கைது செய்யப்பட்டு இந்தியாவின் பல சிறைகளுக்கு மாற்றப்பட்டார். இந்நிலையில் சிறையிலிருந்து வெளியே வந்த சுந்தரய்யா, சென்னையில் இளம் தொழிலாளர்களை தொடர்பு கொண்டு கம்யூனிஸ்ட்டுகளாக மாற்றி கட்சியை உருவாக்கும் பணியை மேற்கொண்டார்.


***கே.பாலகிருஷ்ணன்***
*மாநிலச் செயலாளர் - சி.பி.எம்*


**தடை விதிப்பு**

1934ம் ஆண்டு ஆங்கிலேயே அரசாங்கமானது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மீது தடை விதித்தது. கம்யூனிஸ்ட்டுகள் தலைமை தாங்கிய இளைஞர் அமைப்புகள் தடை செய்யப்பட்டதுடன், பத்திரிகைகளுக்கும் வாய்ப்பூட்டு போடப்பட்டது. இந்நிலையில் “தொழிலாளர் பாதுகாப்புக் குழு” என்கிற புதிய அமைப்பினை உருவாக்கி பி.சுந்தரய்யா, கே. சத்தியநாராயணா, ஏ.எஸ்.கே. அய்யங்கார், ராஜவடிவேலு, ரஷ்ய மாணிக்கம் ஆகியோரைக் கொண்ட தொழிலாளர்கள் சங்கம் செயல்பட ஆரம்பித்தது.

**காங்கிரஸ் – சோசலிஸ்ட் கட்சி**

கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்ட பின்னணியில் காங்கிரஸ் கட்சிக்குள் இருந்த சோசலிச மனோபாவம் உடைய தீவிர காங்கிரஸ்காரர்களைக் கொண்ட மாநாடு ஜெயப்பிரகாஷ் நாராயணன் தலைமையில் பாட்னாவில் நடைபெற்று, “காங்கிரஸ் – சோசலிஸ்ட் கட்சி” என்கிற அமைப்பு உருவாக்கப்பட்டது.

இதில் பி.ராமமூர்த்தி, பி.சீனிவாசராவ் போன்ற தமிழகத்தைச் சார்ந்தவர்களும், இ.எம்.எஸ்., பி. கிருஷ்ணபிள்ளை, ஏ.கே.கோபாலன் ஆகிய கேரளத் தலைவர்களும் கலந்து கொண்டனர். இந்நிலையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக்குழு கூட்டத்தில் சில வழிகாட்டு கோட்பாடுகள் உருவாக்கப்பட்டது. அதன்படி கட்சி உறுப்பினர்கள், கட்சியிலிருந்து கொண்டே காங்கிரசில் சேர்ந்து, அதனுடன் தொடர்புகளை வைத்துக் கொள்ள வேண்டும். அதேபோல, காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியிலும் சேர்ந்து பணியாற்ற வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது.

இதன்படி கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்கள் ஒருபக்கம் கம்யூனிஸ்ட்டுகள் என்ற முறையில் ரகசியமாக சந்தித்து திட்டங்களை உருவாக்குவது, காங்கிரஸ் உறுப்பினர் என்ற முறையில் கூட்டங்கள், மாநாடுகள், இயக்க வேலைகளில் பங்கெடுப்பது, காங்கிரஸ் சோசலிஸ்ட் உறுப்பினர் என்கிற முறையில் அதன் மாநாடுகளில் கலந்து கொள்வதோடு வெகுஜன அமைப்புகளை உருவாக்கி தீவிரமாக பணியாற்ற வேண்டுமென மூன்றுவித கடமைகளை நிறைவேற்றினார்கள். இந்த பணியில் பி. ராமமூர்த்தி, பி. சீனிவாசராவ் உள்ளிட்ட முக்கியத் தலைவர்கள் பங்கு வகித்தனர். இவர்களோடு பம்பாய் மாகாணத்திலிருந்து

அரசாங்கத்தால் வெளியேற்றப்பட்ட எஸ்.வி. காட்டேவும் இணைந்து கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்குவதிலும், தொழிற்சங்கங்களை அமைக்கும் பணியிலும் ஈடுபடுத்திக் கொண்டனர்.

**பெரியார் – ஜீவா**

சோவியத் நாட்டில் பயணம் செய்து திரும்பி வந்த தந்தை பெரியார், பகுத்தறிவு கொள்கைகளுடன் சமதர்ம கொள்கைகளையும் இணைத்து பிரச்சாரம் செய்யப் போவதாக அறிவித்தார். இவரோடு ஜீவாவும், சிங்காரவேலரும் இணைந்து பிரச்சாரங்களை மேற்கொண்டனர். ஆனால் 1934ம் ஆண்டு வாக்கில் சமதர்ம பிரச்சாரத்தை தந்தை பெரியார் கைவிட்ட நிலையில் கருத்து வேறுபாடு கொண்டு ஜீவா தனித்து செயல்பட்டு வந்தார். இவரைத் தொடர்பு கொண்டு எஸ்.வி. காட்டே, பி. ராமமூர்த்தி, பி. சீனிவாசராவ் ஆகியோர் பல நாட்கள் விவாதத்திற்குப் பிறகு ஜீவா காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியில் இணைத்தார் கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தை ஏற்றுக் கொண்டு தமிழகத்தில் சிறந்த கம்யூனிஸ்ட் பேச்சாளராகவும், எழுத்தாளராகவும் திகழ்ந்தார்.

**போர்க்களமாக மாறிய தமிழகம்**

1935-36ம் ஆண்டுகளில் தமிழகம் போர்க்களமாக மாறியது என்றால் மிகையல்ல. எண்ணற்ற தொழிலாளர்கள் போராட்டங்கள், விவசாயப் போராட்டங்கள், மாணவர்கள் – இளைஞர்கள் போராட்டங்கள் வெடித்துக் கிளம்பின. இப்போராட்டங்களுக்கு தலைமை தாங்கி வழிநடத்திய பெருமை காங்கிரஸ் – சோசலிஸ்ட் கட்சியில் செயல்பட்டு வந்த கம்யூனிஸ்ட்டுகளையே சாரும். கள் இறக்கும் தொழிலாளர்கள் போராட்டம், சென்னை டிராம் தொழிலாளர்கள் போராட்டம், அச்சுத் தொழிலாளர்கள் போராட்டம், கோவை, திருச்சி, சேலம், மதுரை, தென்னாற்காடு, வடஆற்காடு மாவட்டங்களில் நடைபெற்ற தொழிலாளர்கள் போராட்டங்கள், அரசின் அடக்குமுறைகளை மீறி நடைபெற்றன.

**எம்.ஆர்.வெங்கட்ராமன்**

இப்போராட்டங்களுக்கு தேவையான சட்ட உதவிகள் செய்யும் பணியில் சிறந்த வழக்கறிஞரான எம்.ஆர். வெங்கட்ராமன் ஈடுபட்டார். பின்னர் அவரும் கம்யூனிஸ்ட் கொள்கைகளின் பால் ஈர்க்கப்பட்டு வழக்கறிஞர் தொழிலை உதறிவிட்டு கட்சியின் முழுநேர ஊழியராக மாறினார். இதன் காரணமாக அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

அந்த நேரத்தில் உடல்நலம் குன்றியிருந்த அவரது துணைவியாரை பார்ப்பதற்கு பரோலில் வெளியே வந்த எம்.ஆர்.வெங்கட்ராமன், துணைவியாரைப் பார்த்து ஆறுதல் கூறிவிட்டு சிறைக்கு திரும்ப இருந்த நேரத்தில் கட்சித் தலைமையிடமிருந்து அவருக்கு ஒரு தகவல் வந்தது. அவர் தலைமறைவாகச் சென்று கட்சிப் பணியாற்ற வேண்டுமென்றும், சிறைக்கு திரும்ப வேண்டாமெனவும் அந்த தகவல் தெரிவித்ததன் அடிப்படையில் அவர் தலைமறைவாகச் சென்று இயக்கப் பணிகளில் ஈடுபட்டார். அடுத்த சில நாட்களில் அவரது துணைவியார் மரணமடைந்தார். தலைமறைவான எம்.ஆர். வெங்கட்ராமனை கைது செய்ய காவல்துறை அவரது வீட்டைச் சுற்றி காத்திருந்த காரணத்தினால் மனைவியின் இறுதி நிகழ்ச்சியில் கூட எம்.ஆர். வெங்கட்ராமன் கலந்து கொள்ளவில்லை.

**முத்துராமலிங்கத் தேவர்**

கோவையில் லட்சுமி மில் தொழிலாளர்கள் போராட்டம், மதுரையில் மகாலெட்சுமி மில் தொழிலாளர்கள் போராட்டங்கள் வெடித்தன. மதுரையில் தொழிற்சங்கத் தலைவராக இருந்த முத்துராமலிங்கத் தேவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். ஜீவா, பி. ராமமூர்த்தி ஆகியோர் மதுரைக்குச் சென்று அந்தப் போராட்டங்களை தலைமை தாங்கி நடத்தினர். இதேகாலத்தில் நெல்லிக்குப்பம் பாரி மிட்டாய் தொழிற்சாலை, ராணிப்பேட்டை உள்ளிட்ட பல இடங்களில் போராட்டங்கள் நடைபெற்றன.

**கீழத் தஞ்சையில்…**

மறுபக்கம் கிராமப்புறங்களில் ஜமீன்தார்கள், பண்ணையார்கள் செய்த கொடுமைகள் தாங்காமல் விவசாயப் போராட்டங்கள் வெடித்துக் கிளம்பின. கந்து வட்டி கொடுமையையும் எதிர்த்தும், குத்தகை விவசாயிகள் நிலவெளியேற்றம், பண்ணையார் அடக்குமுறை, சமூக ஒடுக்குமுறை உள்ளிட்டவற்றை எதிர்த்தும் பல போராட்டங்கள் நடைபெற்றன.

கீழத்தஞ்சையில் இக்கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்ட விவசாயிகளையும், விவசாயத் தொழிலாளர்களையும் திரட்டுகிற பணியில் பி. சீனிவாசராவ் ஈடுபட்டார். கண்மூடித்தனமான கொடுமைகளுக்கு உள்ளாகியிருந்த பண்ணை அடிமைகளையும், குத்தகை விவசாயிகளையும் திரட்டி வீரஞ்செறிந்த போராட்டத்தை நடத்திய பெருமை பி. சீனிவாசராவ் அவர்களையே சாரும். சாணிப்பால், சவுக்கடிக்கு உள்ளான இம்மக்களை "அடித்தால் திருப்பி அடி" என ஆவேச முழக்கமிட்டு நம்பிக்கை நட்சத்திரமாக திகழ்ந்தார். தனது இறுதி மூச்சு வரை இப்போராட்டத்தில் ஈடுபட்டார்.

**மாணவர் எழுச்சி**

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து இதர மக்களைப் போலவே மாணவர்களும் களமிறங்கி போராடத் துவங்கினர். இதேகாலத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடத்திய போராட்டங்களில் பல மாணவர்கள் கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டனர்.

பாலதண்டாயுதம், கே.முத்தையா, ஆர்.உமாநாத் போன்றவர்கள் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்டதுடன் அவர்கள் படிப்பைத் துறந்து கம்யூனிஸ்ட் இயக்கத்தில் முழுநேர ஊழியராக மாறினார்கள். இதனைத் தொடர்ந்து மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற மாணவர்கள் போராட்டங்களுக்கு மதுரை அமெரிக்கன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த என். சங்கரய்யா தலைமை தாங்கி மாணவர்களைத் திரட்டி விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுத்தினார்.

தோழர் என்.சங்கரய்யா மற்றும் மாணவர் தலைவர்களும் படிப்படியாக கம்யூனிஸ்ட்டுகளாக மாறி, முழுநேர ஊழியர்களாகி மக்கள் பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டனர். இத்தகைய பிரம்மாண்டமான மக்கள் எழுச்சி போராட்டக்களத்தில் பூத்த மலராகவே 1936ம் ஆண்டு முதல் கம்யூனிஸ்ட் கட்சி கிளை உருவாக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தமிழகத்தின் பல பகுதிகளில் கம்யூனிஸ்ட் இயக்கம் வேர்விட்டு மலர்ந்தது.

கம்யூனிஸ்ட்டுகள் ஏகாதிபத்திய நுகத்தடியிலிருந்து இந்திய நாட்டை மீட்டெடுக்கவும், அதேசமயம் உள்நாட்டு, வெளிநாட்டு முதலாளிகளின் சுரண்டல் கொடுமைகளிலிருந்து தொழிலாளர்களையும், நிலப்பிரபுத்துவ பண்ணையடிமை முறையை தகர்த்து கிராமப்புற விவசாயிகளையும், விவசாயத் தொழிலாளிகளையும் விடுவிக்கும் மகத்தான போராட்டங்களை தலைமை தாங்கி நடத்தினார்கள். அரசின் அடக்குமுறைகள், தடைகள், சிறைச்சாலைகள், தண்டனைகள், காவல்துறை நேரடித் தாக்குதல்கள் அனைத்தையும் நெஞ்சுறுதியுடன் எதிர்த்துப் போராடிய வீரப்பாரம்பரியம் மிக்கதே கம்யூனிஸ்ட் கட்சியாகும்.

தொடக்கம் முதல் இன்று வரை இந்த மகத்தான தியாக பாரம்பரியத்தில் பயணித்து வரும் கம்யூனிஸ்ட் கட்சியின் வீர வரலாற்றை இன்றைய தலைமுறைக்கு எடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்பினை இந்த நூற்றாண்டு முழுவதும் நிறைவேற்ற பாடுபடுவோம்.

# சுயசார்பே எமது தற்காப்புக் கேடயம்

இலங்கை ஒரு விவசாய நாடு. விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரமாவே எமது பொருளாதாரம் 1977 வரை இருந்தது. அதனால் உணவு தேவையைப் பொறுத்தவரை எமது நாடு சுயாதாரமாவே இருந்தது.

1977 இல் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இந்த நிலைமையை மாற்றி அமைத்தது. 'திறந்த பொருளாதாரக் கொள்கை' என்ற பெயரில் உலக வட்டிக்கடைக்காரனான உலக வங்கியின் ஆலோசனைகளை ஏற்ற ஜே.ஆர். அரசு, இலங்கையின் தேசிய பொருளாதாரத்தைப் படிப்படியாகச் சீர்குலைக்கத் தொடங்கியது.

கட்டுப்பாடற்ற இறக்குமதிக் கொள்கையை நடைமுறைப்படுத்தியதின் மூலம், இந்தியாவில் இருந்து எல்லா வகையான உணவுப் பொருட்களும் இறக்குமதியாகி இலங்கையின் விவசாயம் சீர்குலைந்தது. குறிப்பாக, இதனால் கூடுதலாகப் பாதிக்கட்டவர்கள் வட பகுதி விவசாயிகளே. அதற்கு முதல் 1970 முதல் 1977 வரை ஆட்சியில் இருந்த சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசாங்கம் பின்பற்றிய கட்டுப்பாடான இறக்குமதி கொள்கையால் வட பகுதி விவசாயிகள் பெற்ற நன்மையை எல்லோரும் அறிவர்.

இன்னொரு பக்கத்தில், ஜே.ஆர். அரசின் கட்டுப்பாடற்ற இறக்குமதிக் கொள்கையால் யப்பானிலிருந்து பெருமளவான துணி வகைகள் இறக்குமதியாகி இலங்கையின் நெசவுத் தொழில் படுத்துக் கொண்டது. இதன் காரணமாக கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு, அம்பாரை மாவட்டங்களில் நெசவுத் தொழிலை நம்பியிருந்த குடும்பங்கள் வாழ வழியற்ற நிலைக்குத் தள்ளப்பட்டன. இவர்களில் அநேகர் முஸ்லீம் மக்கள். முன்னைய ஆட்சியில் இறக்குமதிக் கட்டுப்பாடு நிலவிய காலத்தில் பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மின்தறி நெசவாலையில் யப்பானியத் தரத்துக்கு நிகரான காற்சட்டைத் துணிகள் உற்பத்தியாகின என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.



ஜே.ஆரின் ஐ.தே.க. ஆட்சி பின்பற்றிய சிங்களப் பேரினவாதக் கொள்கைகள், தீவிர ஏகாதிபத்திய சார்புக் கொள்கைகள் என்பனவற்றுடன், அவரது அரசு பின்பற்றிய திறந்த பொருளாதாரக் கொள்கையும் சேர்ந்தே தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் இனவாத அடிப்படையிலான பிரிவினைவாத சிந்தனையைத் தோற்றுவித்தது என்பதையும் வரலாற்றை ஆராய்பவர்கள் கவனத்தில் எடுக்க வேண்டும்.

**பிரதீபன்**

ஐ.தே.க. ஆட்சி போய் சந்திரிக குமாரதுங்க தலைமையிலான ஆட்சி வந்தது. ஆனால் அவரது இரண்டு ஆட்சிக் காலத்திலும் அவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன அறிமுகப்படுத்திய நாட்டை நாசம் செய்த திறந்த பொருளாதாரக் கொள்கையை மாற்றியமைக்கவோ அல்லது தமது தந்தை பண்டாரநாயக்கவும், தாயார் சிறீமாவோ பண்டாரநாயக்கவும் ஆட்சியில் இருந்தபோது அவர்களது சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசுகள் பின்பற்றிய கொள்கைகளை அமுல்படுத்தவோ முயற்சிகள் எதனையும் எடுக்கவில்லை. அதுமாத்திரமல்லாமல் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவும் அவரால் இயலவில்லை.

இந்த நிலைமையில் சந்திரிகவுக்குப் பின்னர் மகிந்த ஜனாதிபதியானார். அவரும் இரு தடவைகள் ஜனாதிபதிப் பதவி வகித்தார். விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தவர் என்ற ரீதியில் அவருக்கு நாட்டு மக்கள் மத்தியில் செல்வாக்கும் பூரண ஆதரவும் இருந்தபோதும் அவராலும் ஜே.ஆர். அரசு கொண்டு வந்த திறந்த பொருளாதாரக் கொள்கையை இல்லாதொழித்து நாட்டில் மீண்டும் தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியவில்லை.

புலிகளின் பாதுகாவலர்களான மேற்கத்தைய நாடுகள் மகிந்த மீது போர்க்குற்றங்கள் சுமத்தி அவரைத் தண்டிக்கவும், அவரது ஆட்சியைக் கவிழ்க்கவும் முயன்று வந்ததால், அவரால் தேசிய விவகாரங்களில் பூரண கவனம் செலுத்து முடியாத ஒரு நிலையே நிலவியது. அவர் அஞ்சியபடியே அவரது ஆட்சியை 2015 இல் மேற்கத்தைய நாடுகளும் அவர்களது பிராந்தியக் கூட்டாளிகளும் சேர்ந்து கவிழ்த்துவிட்டார்கள்.

2015 இல் 'நல்லாட்சி' என்ற பெயரில் ஐ.தே.கவும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்த துரோகிகளும் சேர்ந்து ஒரு ஆட்சியை அமைத்தனர். அந்த ஆட்சியின் இலட்சணம் எப்படியிருந்தது என்பதை இங்கு விபரிக்கத் தேவையில்லை. ஏனெனில் அந்த நல்லாட்சியும் முன்னைய ஐ.தே.க. ஆட்சிகளின் தொடர்ச்சிதான்.

இந்த நிலைமையில்தான் 2019 நொவம்பரில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ச வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தார். அத்துடன் இவ்வருடம் நடைபெற்ற பொதுத்

தேர்தலில் அவரது கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்ததுடன், அவரது சகோதரரும் முன்னைய ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ச பிரதமராகவும் பதவியேற்றுக் கொண்டார். எனவே தற்போதைய அரசு மிகவும் பலம் வாய்ந்த ஒன்றாகவும், நாட்டு மக்களில் ஏகப்பெரும்பான்மையோரின் ஆதரவு பெற்றதாகவும் இருக்கின்றனது. அதாவது தற்போதைய அரசு தான் விரும்பியதைச் செய்யக்கூடிய நிலையில் இருக்கின்றது. இன்னும் சொல்லப்போனால் 1977 இல் ஜே.ஆர். பெற்ற வெற்றிக்குப் பின்னர் ஏறக்குறைய அத்தகைய ஒரு வெற்றி தற்போதைய அரசுக்குக் கிடைத்திருக்கிறது.

எனவே, அதலபாதாளத்தில் வீழ்ந்து கிடக்கும் இலங்கையின் பொருளாதாரத்தை மீண்டும் நிமிர்த்தி நிமிர வைப்பதற்கு தற்போதைய அரசு என்ன நடவடிக்கைகளை எடுக்கப் போகின்றது என்பதுதான் அனைவரதும் எதிர்ப்பார்ப்பாக இருக்கின்றது.

கோத்தபாய ஆட்சிக்கு வந்தது முதல் நாட்டு மக்களின் நலன் கருதி தனது சக்திக்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுத்து வருவதை அவதானிக்க முடிகிறது. அதாவது கிராமப்புற மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், விலைவாசிகளைக் குறைக்கவும், உட்கட்டமைப்பு வசதிகளை மேலும் வலுப்படுத்தவும், வீட்டு வசதிகளை விரிவுபடுத்தவும், வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் அவர் பல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார். பாதகமான சர்வதேசச் சூழல், கொரோனா நோய்த்தாக்கம் என்பனவற்றுக்கு மத்தியில் இவைகள் சாதனைகள்தான் என்பதை மறுப்பதற்கு இல்லை. ஆனால் இலங்கையின் பொருளாதாரத்தை நிலைநிறுத்த இவை மட்டும் போதுமா என்பதே கேள்வி.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட உயர்மட்ட சீனத் தூதுக்குழு ஒன்றிடம் பேசிய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச, 'இலங்கை மேலும் மேலும் வெளிநாட்டுக் கடன்களை எதிர்பார்ப்பதை விட முதலீடுகளையே எதிர்பார்க்கிறது' எனக் குறிப்பிட்டார். இது ஒரு சரியான கருத்துநிலை. இந்தக் கருத்தின் மூலம் அவர் தனது அரசின் பொருளாதாரக் கொள்கையின் திசை மார்க்கத்தைக் கோடிகாட்டியுள்ளார்.

ஆனால் வெளிநாட்டு முதலீடுகள் எனும் போது முதலிட வருபவர்கள் சர்வதேசச் சந்தையில் இலாபகரமாக விற்கக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய துறைகளிலேயே முதலீடு செய்ய விரும்புவர். அது பெரும்பாலும் கைத்தொழில் துறையாகவே இருக்கும். அதன் மூலம் இலங்கை சுயசார்புப் பொருளாதாரம் ஒன்றைக் கட்டியெழுப்ப முடியுமா என்பது சந்தேகமே.

இலங்கையைப் பொறுத்தவரை முதலில் உணவுத் தன்னிறைவுக்கான விவசாய அபிவிருத்திக்கு முன்னுரிமை கொடுப்பதுதான் சரியாக இருக்கும். அதன் பின்னர் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழிலையும், விவசாயப் பொருட்களின் ஏற்றுமதியையும் உருவாக்க வேண்டும். இது ஒன்றே எம்மை சுயசார்புக்கு இட்டுச் செல்லும் அடிப்படையாகும்.

இந்த விடயத்திலும் கோத்தபாய அரசு முன்னைய அரசுகளைக் காட்டிலும் அதிக கரிசனையுடன் இருப்பதாகத் தெரிகிறது. விவசாயத்தை வளர்த்தெடுப்பதே தனது பிரதான நோக்கம் எனக் குறிப்பிட்டதன் மூலம் கோத்தபாய சரியான திசை வழியில் காலடி எடுத்து வைத்திருப்பதை அவதானிக்க முடிகிறது. ஆனால் அதை நடைமுறையில் செயல்படுத்துவதிலேயே அதன் வெற்றி தங்கியுள்ளது.

நாட்டிலுள்ள குளங்கள் அனைத்தையும் புனரமைப்பது என எடுத்த முடிவு சரியானது. ஏனெனில் விவசாயிகளைப் பொறுத்தவரையில் நிலப் பிரச்சினையை விட இருக்கிற நிலங்களுக்கு நீர் இல்லாமையே பெரும் பிரச்சினையாக இருக்கிறது. அடுத்த பிரச்சினை விவசாயம் செய்வதற்கான பண முதலீட்டுப் பிரச்சினை. இந்தப் பிரச்சினையை குறைந்தபட்சம் இலகு கடன்கள் மூலமாவது தீர்க்க வேண்டும். இவை தவிர, நல்ல ரக விதைகள், மானிய விலையில் உரம் – கிருமிநாசினி என்பவைகள், விளைபொருட்களை நியாய விலையில் சந்தைப்படுத்தும் வசதி, விளைபொருட்களை நீண்ட காலத்துக்கு பாதுகாத்து வைக்கும் வசதி எனப் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும். இவை எல்லாம் ஒத்த சீரில் அமையும்போதுதான் விவசாயம் வளர்ச்சி அடைந்து சுயசார்பை எட்ட முடியும்.

இலங்கை எதிர்நோக்கும் அதிக வட்டியுடனான கடன் பிரச்சினை, மேற்கத்தைய நாடுகளின் பொருளாதாரத் தடை மிரட்டல், நாட்டில் பஞ்சம் ஏற்படாமல் தடுத்தல், நாட்டு மக்களின் வருமானத்தை அதிகரித்தல் போன்ற இன்னோரன்ன பிரச்சினைகள் அனைத்துக்கும் பொருளாதாரத்தை சுயசார்பாகக் கட்டியெழுப்புதலே ஒரே தீர்வாகும்.

நன்றி: chakkaram.com

## கொரோனாவின் பூர்வீகம் தேடி நிபுணர்கள் வூஹான் பயணம்



உலக சுகாதார அமைப்பின் சர்வதேச ஆராய்ச்சியாளர்கள் கொரோனா வைரஸ் பரவல் எப்படி ஆரம்பித்தது என்பதை ஆராய சீனாவின் வூஹான் நகருக்குச் செல்லவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வூஹான் நகருக்கு சர்வதேச ஆராய்ச்சியாளர்களில் 10 பேர் அடுத்த மாதம் செல்லவுள்ளனர்.

இதற்குமுன் தன்னிச்சையான விசாரணையை நடத்த சீனா ஒப்புக்கொள்ளவில்லை. அதையடுத்து, பல மாதகால பேச்சுவார்த்தைக்குப் பின்னர் உலக சுகாதார அமைப்பை வூஹான் நகருக்குச் செல்ல சீனா அனுமதி வழங்கியுள்ளது.

உயிர் விலங்குகள் விற்கப்பட்ட சந்தையிலிருந்து வைரஸ் பரவியதாக நம்பப்படுகிறது.

வூஹான் நகருக்கு ஆராய்ச்சியாளர்களை அனுப்புவது சீனா மீது பழிபோடும் நோக்கத்திற்காக அல்ல என்ற அந்த அமைப்பு மாறாக, எதிர்கால வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக மட்டுமே என்று குறிப்பிட்டது.

மனிதர்களைப் பாதிக்கக்கூடிய கொரோனா வைரஸ் பல ஆண்டுகளாக வெளவால்களில் கண்டறியப்படாமல் இருந்திருக்கலாம் என்று ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

எனினும் கொரோனா வைரஸ் பரவல் தொடர்பான பல கேள்விகளுக்கு இன்னும் விடை காணப்படாத சூழல் உள்ளது. வூஹான் காட்டு விலங்கு வர்த்தகச்

**தொடர்ச்சி 9ம் பக்கம் பார்க்க...**

# ஒரு புரட்சியாளரின் வாழ்க்கை பற்றிய குறிப்புரை

**"நாங்கள் பட்டினியால் சாக மாட்டோம். துப்பாக்கிக் குண்டுகளால் சாவோம்"**

**–சாரு மஜூம்தார்**

சாரு மஜூம்தார் 1919ஆம் ஆண்டு வாரனாசியில் பிறந்தார். தேதி சரியாகத் தெரியவில்லை. அது ஜெய்த்திசியா என்ற வங்காள மாதம். ஆங்கிலக் கணக்குப்படி மே–ஜூன் மாதம். அவருக்கு 7 வயது இருக்கும்போது சிலிகுரியில் உள்ள அவரின் பெற்றோர் இல்லத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

சிலிகுரி (Siliguri) என்ற ஊர் தற்போதைய மேற்கு வங்கத்தின் டார்ஜிலிங்கில் இருக்கிறது. சிலிகுரி ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் அவரை ஆறாம் வகுப்பில் சேர்த்தார்கள். அவர் அங்கு மெட்ரிகுலேஷன் படிப்பில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். பின்னர் (தற்போது வங்கதேசத்தில் இருக்கும்) பாப்னாவில் உள்ள எட்வர்டு கல்லூரியில் 1937ஆம் ஆண்டு சேர்ந்தார். அவர் மிகச் சிறந்த மாணவர். இருந்தபோதும் படிப்பை முடிக்காமலேயே சிலிகுரிக்கு வந்து சேர்ந்தார்.

அவர் பள்ளியில் படிக்கும்போதே தேசிய விடுதலை இயக்கத்தில் ஆர்வமுள்ளவராக இருந்தார். 1938ல் காங்கிரஸ் சோசலிசக் கட்சியில் சேர்ந்தார். அவரது தந்தை பிரேஷ்வர் மஜூம்தார் டார்ஜிலிங் மாவட்டக் காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்தார். அவருடைய தாய் உமா சங்கரி தேவி மிகவும் முற்போக்கான பெண்மணி. அவர் மக்கள் இயக்கங்களையும் பல்வேறு நல்ல பணிகளையும் ஆதரித்து வந்தார். சாருவின் வாழ்க்கையை வடிவமைப்பதில் அவர் தாயின் பங்கு மிகவும் முக்கியமானது.

1939ல் அருகாமையில் உள்ள ஜல்பைகுரி மாவட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி துவக்கப்பட்டபோது அதில், உடனே சாரு சேர்ந்தார். அதன் முழு நேரப் பணியாளர் ஆனார். அவர் மிகவும் கொடூரமான முறையில் ஒடுக்குமுறைக்கு ஆளாகியிருந்த விவசாயிகள் மத்தியில் பணி செய்தார். அந்த மாவட்டப் பொருளாதாரத்தின் மிக முக்கியமான தூணாக இருந்தவர்கள் ஆதியார் எனப்படும் பிரிவினர். அவர்கள் குத்தகை விவசாயிகள். விளைச்சலில் 'ஆதாவை' அதாவது பாதியை அவர்கள்



நிலப்பிரபுவுக்குக் கொடுக்க வேண்டும் என்பதால் ஆதியார் என்று குறிப்பிடப்பட்டனர்.

ஆதியார்கள் விளைய வைத்ததில் பெரும்பங்கு நிலப்பிரபுவிற்குப் போனதால் விவசாயிகள் கடுமையான வறுமையின் பிடியில் சிக்கியிருந்தனர். அதன் காரணமாக, விவசாயம் இல்லாத நாட்களில் நிலப்பிரபுவிடமிருந்து தானியத்தை, அநியாய வட்டிக்குக் கடனாகப் பெற்றனர். பின்னர் அந்தக் கடனை அடைக்க விடாது பாடுபட்டனர். கடனுடன் வட்டியையும் சேர்த்தால் அதனை ஒரு நாளும் அடைக்க முடியாது. கடன் வலையில் சிக்கியே விவசாயிகள் தங்கள் வாழ்க்கையை அழித்தனர்.

இப்படியாக ஜல்பெய்குரியின் விவசாயிகள் பண்ணை அடிமைகள் ஆகிப் போயிருந்தனர். தங்கள் ஊரில் கம்யூனிஸ்ட் கட்சியைக் கண்டவுடன் விவசாயிகள் போராட்டப் பாதையில் பயணப்படத் துவங்கினர். கட்சியின் தலைமையில் விவசாயிகள் சங்கமும் எதிர்ப்புப் போராட்டப் படையும் அமைக்கப்பட்டன. ஆனால், இயக்கம் வலுப்படத் துவங்கியவுடன் அரசு ஒடுக்குமுறையும் வேகம் பிடித்தது.

ஒருநாள் ஜல்பெய்குரி கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்திற்கு இளைஞன் ஒருவன் வந்தான். பெரிய கண்களும், வாரப்படாத முடியும் கொண்ட அந்த வசீகரமான இளைஞன் கட்சி செயலாளரிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். "என் பெயர் சாரு மஜூம்தார். நான் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்து விவசாயிகள் மத்தியில் பணி புரிய விரும்புகிறேன்", என்று சொன்னான்.

செயலாளர் அவனிடம், "உன்னால் சிரமங்களைத் தாங்கிக்கொள்ள முடியுமா?", என்று கேட்டார். அந்த இளைஞன் நிச்சயம் என்பது போலத் தலையசைத்தான்.

அதன்பின் மாவட்டச் செயலாளரான சச்சின் தேஷ்குப்தா சாருவை டோராஸ் பிராந்தியப் பயணத்தில் அழைத்துச் சென்றார். பயணம் என்றால் நடைபயணம்தான். மூன்று மாதங்கள் அந்தப் பயணம் நீடித்தது. அவர்கள் ஏழை விவசாயிகளின் வீடுகளில் தங்கினர். சில சமயம் அவர்களுக்கு உணவு கிடைக்கும். சில சமயம் கிடைக்காது. சில சமயம் வெட்டவெளியில் படுத்துறங்க வேண்டிவரும். சில சமயம் ஜல்தக்கா நதி பாலத்தில் உறங்குவார்கள். சில சமயம் தூங்குவதற்கு மாட்டுத் தொழுவத்தில் இடம் கிடைக்கும்.

எந்தவொரு சூழலையும் தாக்கு பிடிக்க முடியும் என்பதையும் விவசாயிகளுடன் ஒன்று கலக்க முடியும் என்பதையும் சாரு மஜூம்தார் நிரூபித்தார். சச்சின் தேஷ்குப்தாவிற்கு சாருவின் மீது நம்பிக்கை வந்தது, அவரின் கவலையும் விட்டது. இப்படித்தான், விவசாயிகளுடனான சாரு மஜூம்தாரின் முடிவற்று நீண்ட உறவு துவங்கியது.

மிகக் குறுகிய காலத்திலேயே சாரு மஜூம்தார் விவசாயிகள் மத்தியில் பிரபலமாகி விட்டார். அவரைப் பார்த்தாலே விவசாயிகளுக்கு மகிழ்ச்சி வெள்ளம் பொங்கும். விவசாயிகளின்

மனதைப் படிப்பதில் அவரும் நிபுணராக இருந்தார். 1942ல் கட்சியின் முழுத் தகுதி வாய்ந்த உறுப்பினரானார். அப்போது கட்சி வேலை தேயிலைத் தோட்டங்களுக்கும், இரயில்வே துறைக்கும் விரிவடைந்துகொண்டிருந்தது. அவற்றிலும் சாரு மஜூம்தார் செயல் துடிப்புள்ள பங்கெடுக்க ஆரம்பித்தார்.

1943 ஆம் ஆண்டு பஞ்சத்தின்போது, சாரு அளித்த ஆலோசனையின்படி போர்க்குணம்மிக்க ஆதியார்களின் போராட்டம் துவங்கியது. நிலப்பிரபுக்கள் தங்களின் தானியக் களஞ்சியங்களைப் பாதுகாப்பாக வைத்திருந்தனர். ஆனால் ஆதியார்களோ பட்டினியில் செத்துக்கொண்டிருந்தனர். அப்போது கட்சி ஒரு கோஷத்தை முன்வைத்தது. "நாங்கள் பட்டினியால் சாக மாட்டோம். துப்பாக்கிக் குண்டுகளால் சாவோம்" என்பதுதான் அந்த முழக்கம்.

அந்த முழக்கம் கிராமப்புற ஏழைகளின் மத்தியில் மிகுந்த வரவேற்பு பெற்றது. நிலப்பிரபுக்களின் களஞ்சியங்களில் இருந்து ஏழைகள் நெல்லைக் கைப்பற்றினர். கைப்பற்றப்பட்ட நெல் நியாய விலைக்கு விற்பனை செய்யப்பட்டது. விற்பனையில் கிடைத்த பணம் சம்பந்தப்பட்ட நிலப்பிரபுவிடம் ஒப்படைக்கப்பட்டது. நிலப்பிரபு வாங்கிக்கொள்ள மறுத்து நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தால், நிலப்பிரபுவின் பணம் வழக்கு நிதியில் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

1945 இறுதி வாக்கில், வரலாற்றுப் புகழ்பெற்ற தெபகா இயக்கம் (Tebhaga movement) துவங்கியது. அதனைப் பச்சாகரில் இருந்து வழிநடத்தும் பொறுப்பு சாரு மஜூம்தாருக்குக் கொடுக்கப்பட்டது. பச்சாகார் முஸ்லீம்கள் நிறைந்த பகுதி. தற்போது அது வங்கதேசத்தில் உள்ளது. அது தெபகா இயக்கத்தின் முக்கிய மையங்களில் ஒன்றாக இருந்தது. சாரு தலைமறைவாக இருந்து இயக்கத்தை வழிநடத்தினார். அவரின் தலைமையின் கீழ் மிகப் பெரும் பகுதி ஏறக்குறைய மக்களின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. அதாவது அது பகுதியளவு விடுதலை செய்யப்பட்ட பகுதி என்ற நிலையை எட்டியது. பச்சாகார் அனுபவம் சாருவிற்கு நிறையப் பாடங்களைக் கற்றுத் தந்தது. பின்னர் அவர் நக்சல்பாரி இயக்கத்தை வழிநடத்தியபோது அது பயனாகியது.

போலீசின் கொடும் ஒடுக்குமுறையைத் தாண்டிப் போராட்டம் டோராஸ் பிராந்தியம் முழுமைக்கும் பரவியது. தோட்டத் தொழிலாளர்களும் விவசாயிகளும் சேர்ந்து மிகப் பிருமாண்டமான பேரணிகளை நடத்தினர். நிலப்பிரபுக்களின் பயிர்களைக் கைப்பற்றினர். ஜெல்பைகுரியின் மங்கலபரி – நெருமாஜ்ஹரி பகுதியில் நடந்த மோதலில், போலீசாரின் துப்பாக்கிகளை விவசாயிகள் பறித்துக்கொண்டனர். 11 விவசாயிகள் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அந்தப் போராட்டம் இரயில்வே தொழிலாளர்கள் மத்தியிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. பெங்களா–டோரா பிராந்திய இரயில்வேயில் வலுவான தொழிற்சங்கக் கிளையொன்று துவக்கப்பட்டது.

இயக்கம் வலுப்பட வலுப்பட போலீஸ் ஒடுக்குமுறையும் வலுப்பெற்றது. அனைத்துக் கடினங்களையும் எதிர்கொண்டு இயக்கத்தை வலுப்படுத்தக் கட்சி கிளை திட்டமிட்டபோது, போராட்டத்தைக் கைவிட வேண்டும் என்று மாநிலக் கட்சிக் கமிட்டி முன்மொழிந்தது. அரசு இதனை ஓர் இயக்கம் என்று ஒப்புக்கொண்டதைக் காரணம் காட்டியது மாநிலக் கமிட்டி. ஆனால், சாரு மஜூம்தாரும் இதர பிற உள்ளூர் தலைவர்களும் அதனை ஒப்புக்கொள்ள மறுத்தனர். விவசாயத் தொழிலாளர்களை ஏன் அணி திரட்டமுடியவில்லை என்பது குறித்து மாநிலக் கமிட்டி பரிசீலிக்க வேண்டும் என்றும், மேலும் எப்படி முன்னேறிச் செல்வது என்று ஊழியர்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்றும் உள்ளூர் தலைவர்கள் கோரினர்.

ஆனால், மாநிலக் கமிட்டி போராட்டத்தைக் கைவிட வேண்டும் என்று ஆணையிட்டது. தனது முடிவை டார்ஜிலிங் தோழர்கள் மீது திணித்தது. எதிர்காலத்தில் முகிழவிருந்த பெரிய வெற்றி முளையிலேயே கிள்ளப்பட்டுவிட்டது என்று டார்ஜிலிங் தோழர்கள் கருதினர். சாரு மஜூம்தாருக்கு அது மிகக் கடுமையான மனப் பின்னடைவை ஏற்படுத்தியது. காவல்துறை கடுமையான ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்துவிடும் என்று அவர் எதிர்பார்த்தார். அவர் எதிர்பார்த்ததுதான் நடந்தது.

1948ல் இரண்டாவது காங்கிரஸ் அறிக்கையைக் கட்சி அலுவலகத்தில் படித்துக்கொண்டிருந்தபோது, காவல்துறை உள்ளே நுழைந்து, சாரு மஜூம்தார் உட்பட அனைவரையும் கைது செய்தது. முதலில் சாரு மஜூம்தார் ஜல்பைகுரி சிறையில் அடைக்கப்பட்டுப் பின்னர் டும்டும் சிறைக்கு மாற்றப்பட்டார். டும்டும் சிறையிலிருந்து அவரை விமானத்தின் மூலம் பாக்சர் சிறைக்குக் கொண்டு சென்று அடைத்தனர். 1951ல் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

1952 ஜனவரி 9 அன்று சாரு மஜூம்தார் லீலா சென்குப்தாவைத் திருமணம் செய்துகொண்டார். லீலா சென்குப்தாவும் கட்சியின் முழு நேர ஊழியர்தான். கல்யாணத்திற்குப் பின்பு இருவரும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் டார்ஜிலிங் மாவட்ட உறுப்பினர்கள் ஆனார்கள். அந்தச் சமயத்தில் சாரு மஜூம்தார் ஒரே சமயத்தில் கிராமங்களிலும் தேயிலைத் தோட்டங்களிலும் கட்சி பணியாற்றிக்கொண்டிருந்தார். அவர் சிலிகுரியின் ரிக்ஷா தொழிலாளர்கள் சங்கத்தின் தலைவராகவும் இருந்தார்.

1956ல் பாலக்காட்டில் நடைபெற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 3வது காங்கிரசுக்குப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன் பின்பு அந்தக் கட்சியின் வழியுடனான அவரின் மாறுபாடு தீவிரமடையத் துவங்கியது. 1957ல் அவரைக் கல்கத்தாவுக்கு அழைத்த கட்சி, விவசாயிகள் போராட்டத்திற்கு வழிகாட்டும் பொறுப்பை ஏற்கும்படி கோரியது. அவர் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை.

இதற்கிடையில் குடும்பத்தின் பொருளாதார நிலை மிக மோசமடைந்தது. அதைவிட முக்கியமாகக் கட்சி வழியுடனான அவரின் முரண்பாடு நாளுக்கு நாள் தீவிரமடைந்தது. இவற்றின் காரணமாக. அவர் சிலகாலம் சோர்வுற்றிருந்தார். அப்போது சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையிலான மாபெரும் விவாதம் துவங்கியது. அது 1960களின் துவக்கம். அது சூழலை உயிர்த்துடிப்புள்ளதாக ஆக்கியது. கட்சி அமைப்பை வலுப்படுத்த வேண்டும் என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு பிராந்தியங்களான ஜல்பைகுரியிலும், டார்ஜிலிங்கிலும் விடுதலை செய்யப்பட்ட பகுதிகளை உருவாக்க வேண்டும் என்றும் டார்ஜிலிங் தோழர்கள் முடிவு செய்தனர்.

சீன இலக்கியங்களைப் படித்து, அதனால் உருவான புரிதலின்படி ஓர் ஆவணத்தைத் தயார் செய்யும் பொறுப்பு சாருமஜூம்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அந்தச் சமயத்தில் அவர் நக்சல்பாரியில் கட்சி வேலைகளுக்கு வழிகாட்டவும் செய்தார். 1962ல் மேற்சொன்ன ஆவணம் இறுதி செய்யப்பட்டது. அதனை மாநிலக் கமிட்டிக்கு அனுப்பி வைத்தனர். அப்போது பிரமோத் தேஷ்குப்தா சிறையில் இருந்தார். அவர் அங்கிருந்தபடியே ஆவணத்தைப் படித்துவிட்டு, 'இந்த ஆவணத்தை உருவாக்கியவரை உடனடியாகக் கட்சியை விட்டு நீக்குங்கள்' என்று கருத்துரைத்தார். ஆனால் மற்றத் தலைவர்கள் வேறுவிதமான கருத்துகளை வைத்திருந்தனர். விளைவாகத் தேஷ்குப்தாவின் அறிவுரை நடைமுறைப் படுத்தப்படவில்லை.

1963ல் சிலிகுரி சட்டமன்றத் தொகுதிக்கு இடைத் தேர்தல் நடைபெற்றது. உள்ளூர் தோழர்களின் நிர்ப்பந்தத்தின் காரணமாகச் சாரு மஜூம்தாரை வேட்பாளராக அறிவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் கட்சித் தலைமைக்கு ஏற்பட்டது. அப்போது சிறையிலிருந்த சாரு மஜூம்தார் அங்கிருந்தபடியே வேட்பு மனு தாக்கல் செய்தார். பிரச்சாரத்தின்போது ஆயுதப் போராட்டம் பற்றியும், சீனாவின் மீது இந்தியா செய்த ஆக்கிரமிப்பு குறித்தும் சாரு பிரச்சாரம் செய்தார். அப்படிச் செய்வது அப்போதைய கட்சி வழிக்கு எதிரானதாகும்.

தேர்தலில் சாருவுக்கு 3000க்கும் குறைவான வாக்குகள் கிடைத்தன. டெபாசிட்டை இழந்தார். 'நாம் வெற்றிப் பேரணி நடத்துவோம்', என்று அறிவித்தார் சாரு மஜூம்தார். தேசவெறி வாதத்துக்கு எதிராகவும் ஆயுதப் போராட்டத்தை ஆதரித்தும் இத்தனை பேர் வாக்களித்திருப்பது பெரிய வெற்றி என்றார் அவர். அவர் சொன்னபடி பேரணியும் கட்டமைக்கப்பட்டது.

1964ல் மிகத் தீவிரமான உட்கட்சிப் போராட்டத்திற்குப் பின்பு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) பிறந்தபோது சாரு மஜூம்தார் அதில் சேர்ந்தார். ஆனால், அப்போது கம்யூனிச இயக்கத்தில் ஏற்பட்ட பிளவு, எதிர்வரவிருந்த, மேலும் அடிப்படையான பிளவுக்கு முன்னோட்டமாக அமைந்தது.

இந்தியக் கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி புரட்சிகரப் போராட்டத்தைக் கட்டமைப்பதைத் தவிர்த்துத் தேர்தல் மூலமாக அதிகாரத்தைக் கைப்பற்றுவது நோக்கிச் சரிந்த காரணத்தால், புதிய திருத்தல்வாதத்தைத் தத்துவ ரீதியாகவும் நடைமுறையிலும் முறியடிப்பதற்கான போராட்டத்தைச் சாரு மஜூம்தார் தோழர்களுடன் சேர்ந்து முன்னெடுத்தார். நக்சல்பாரி தேசத்தையும் உலகத்தையும் குலுக்கியது. இந்தியக் கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சிக்கு உள்ளும் வெளியிலும் இருந்த புரட்சியாளர்கள் கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களின் அகில இந்திய ஒருங்கிணைப்புக் கமிட்டியில் இணைந்தனர். அந்த அமைப்பு 1968ன் பின்பகுதியில் துவங்கப்பட்டது. 1969 ஏப்ரல் 22 அன்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட்) ஸ்தாபிக்கப்பட்டது.

விதிவிலக்கான ஒன்றாக, அரசியல் துடிப்பு மிக்கதாக, ஜெயில் வாழ்க்கையும் குடும்ப வாழ்க்கையும் இணைந்ததாகச் சாருவின் அரசியல் வாழ்க்கை இருந்தது. அவருடைய இரண்டு மகள்களுக்கும் ஒரு மகனுக்கும் அன்பு நிறைந்த தந்தையாக அவர் விளங்கினார். அவர்களின் படிப்பில் அவர் அவர்களுக்கு உதவினார். ஆங்கில இலக்கணம்– அகராதி துணையின்றி ஆங்கில நாவல்களைப் படிக்க வேண்டும் என்று அவர்களுக்குச் சொன்னார். 'அப்படித்தான் ஆங்கிலத்தைப் படிக்க முடியும்' என்பார் அவர். இரவீந்தரநாத், சரத் சந்திரர், பக்கிங்சந்திரர் எழுத்துக்களைப் படிக்கும்படி அவர்களைத் தூண்டினார்.

இலக்கியத்துவமிக்க இசையை அவர் மிகவும் நேசித்தார். அதுபோன்ற இசையை வானொலியில் கேட்பது அவரின் வழக்கம்.

அந்தப் புரட்சியாளர் பலமுறை சிறையிலடைக்கப்பட்டிருக்கிறார். தீவிரமான படிப்புக்குச் சிறை வாழ்க்கையைப் பயன்படுத்திக் கொண்டார். 1964 துவங்கி வாழ்க்கையின் இறுதி வரை அவர் கொடுமையான ஆஸ்த்துமா நோயினால் பாதிக்கப்பட்டார். அவருக்குச் சிக்கலான இதயப் பிரச்சனையும் இன்னும் பிற உடல் நலக்குறைபாடுகளும் இருந்தன. இருந்தபோதும், தலைமறைவு வாழ்க்கை நடத்திக்கொண்டு, கைது செய்யப்படும் வரை, புரட்சிகர இயக்கத்தை வழிநடத்தும் பொறுப்பைத் தாங்கி முன்நடந்தார். அவர் இறுதியாக 1972 ஜூலை 16 அன்று கைது செய்யப்பட்டார். அதன்பின் 11 நாட்களுக்குச் சொல்ல முடியாத மனிதத் தன்மையற்ற சிறை துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கப்பட்டார். அந்த 'விசாரணை' கல்கத்தாவின் அவப்புகழ் பெற்ற லால் பஜார் லாக் அப்பில் நடைபெற்றது. ஆனால், அவரிடமிருந்து எந்த ஒப்புதல் வாக்குமூலத்தையும் வாங்க முடியவில்லை. ஒரு வார்த்தையைக் கூட அவரின் வாயிலிருந்து பெற முடியவில்லை.

இறுதியில் புரட்சியே வெற்றிபெறும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையில் நிமிர்ந்த தலையுடன் 1972 ஜூலை 28 அன்று மாலை 4 மணி அளவில் அவர் இறுதி தியாகத்தைச் செய்தார். அவரின் உடலைக் கூட அவரின் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கவில்லை. காவல்துறையினரே அவரின் உடலை மயானத்திற்குச் சுமந்து சென்றனர். மொத்தமாக மயானப் பகுதி முழுவதும் காவல் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. யாரையும் அனுமதிக்காமல் அவர் உடலைத் தீக்கு இரையாக்கினர்.

**மூலம்:** "Charu Mazumdar- The Man and His Legacy"

**தமிழில் : சி. மதிவாணன்**

**6ம் பக்கத்தொடர்ச்சி...**

சந்தை இதில் முக்கிய பங்கு ஆற்றியிருக்கக் கூடும் என்ற சந்தேகம் இன்னும் உறுதியாக உள்ளது. இந்த வூஹான் சந்தையை சீன நிர்வாகம் கடந்த ஜனவரியில் மூடியது. இந்நிலையில் இந்த வைரஸின் பூர்வீகம் இந்த சந்தையாக இருக்காது என்ற கோட்பாடுகளும் விஞ்ஞானிகளிடையே அதிகரித்து வருகிறது. அந்தக் காலப்பகுதியில் ஏற்கனவே இந்த வைரஸ் பரவி இருந்து அது ஒன்றுக்கு மேற்பட்ட காவிகள் மூலம் சந்தையை அடைந்திருக்கக் கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் வூஹான் விலங்குணவு சந்தை மீது சீன நிர்வாகம் இன்றும் கடும் கட்டுப்பாடுகளை அமுல்படுத்தியுள்ளது.

வூஹான் நகர் மற்றும் சீனாவெங்கும் மக்கள் வழக்கமாக வாழ்வுக்கு திரும்பியபோதும் இந்த சந்தை வெறிச்சோடிய நிலையிலேயே காணப்படுகின்றது. சீன நிர்வாகமும் கொரோனா வைரஸ் தொற்று வெளிநாடு ஒன்றில் இருந்து உறைய வைக்கப்பட்ட உணவுப் பொதியில் இருந்து வந்திருக்கலாம் என்ற சந்தேகத்தையும் அண்மைக்காலத்தில் வெளியிட்டது. ஆனால் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகமோ கொரோனா தொற்று பரவலுக்கு எதிராக சீனா மீது தொடர்ந்து குற்றம்சாட்டி வருகின்றது.

தகவல்: தினகரன்

# ‘யாழ்ப்பாணம் எனக்கு அழகான உலகம் போல தெரிந்தது’




**யா**ழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற சிங்கள மாணவி ஒருவர் சிங்களத் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் யாழ்ப்பாணத்தைப்பற்றி கூறிய விடயங்கள் பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

சிங்கள மொழியில் இடம்பெற்ற இந்த உரையாடலின் தமிழ் மொழிபெயர்ப்பு இங்கு கீழே தரப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் உள்ளிட்ட தமிழர் தாயக பிரதேசங்கள் குறித்து தென்னிலங்கை சிங்கள மக்கள் மத்தியில் இருக்கும் பல்வேறுபட்ட கருத்து முரண்பாடுகள் மத்தியில், இந்த மாணவியின் வெளிப்படையான கருத்துக்கள் இங்கு பரவலான கவனத்தைப் பெற்றுள்ளது.

**கேள்வி:** உங்களுக்கு கிட்ட உள்ள பல்கலைக்கழகம் எது?

**மாணவி:** சப்பிரகமுவா பல்கலைக்கழகம்

**கேள்வி:** இரத்தினபுரி மாணவர்களுக்கு சப்பிரகமுவா பல்கலைக்கழகம் கிட்ட, கொழும்பில் உள்ள மாணவர்களுக்கு கொழும்பு பல்கலைக்கழகம் கிட்ட, பேராதெனியாவில் உள்ளவர்களுக்கு பேராதெனிய பல்கலைக்கழகம் கிட்ட, இரத்தினபுரி, பேராதெனியவில் உள்ளவர்களுக்கு கொழும்பு பல்கலைக்கழகம் மிகவும் தொலைவில் உள்ளது. கொழும்பில் உள்ளவர்களுக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழகம் மிகவும் தூரத்தில் உள்ளது. அப்படி இருக்கும் போது உங்களுக்கு எப்படி யாழ்ப்பாண பல்கலைக்கழகம் கிட்ட ஆகியது?

**மாணவி:** எனக்கு மிகவும் ஆசை தமிழ்த்திரைப்படம் பார்ப்பதற்கு, அழகான உலகம் இருப்பது போல தெரிந்தது எனக்கு, அங்கு சென்றால் அப்படி வாழமுடியும் போல எனக்கும் தோன்றியது. நான் விரும்பியே அங்கு சென்றேன், முதலில் எனக்கு வவுனியா பல்கலைக்கழகத்திற்கு (applied science) தான் அனுமதி கிடைத்தது, நான் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு (Bio science) விண்ணப்பம் செய்தேன், அதனால் தான் எனக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக அனுமதி கிடைத்தது.

**கேள்வி:** யாழ்ப்பாணத்திற்கே போகவேண்டும் என்று எண்ணியது எதற்காக?

**மாணவி:** எனக்கு யாழ்ப்பாணம் மிகவும் பிடிக்கும், முன்னர் எனது வீட்டுக்கு முன்னால் எம்பிலிப்பிட்டிய–யாழ்ப்பாணம் பஸ் போகும். அதை பார்க்கும் போது எனக்கு ஆசை வந்தது யாழ்ப்பாணம் செல்ல வேண்டும் போல.

**கேள்வி:** எம்பிலிப்பிட்டிய–யாழ்ப்பாணம் பஸ் ஓடிய காலத்தில் நீங்கள் பாடசாலை போயிருப்பீர்கள் அந்த காலத்தில் நிலைமை எப்படி?

**மாணவி:** அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தை பற்றி நல்ல விதமாக அறிந்திருக்கவில்லை, ஆனாலும் அங்கு சென்றவுடன் விளங்கியது நாங்கள் நினைத்தது போல கறுத்தப்பேய் அங்கு இல்லை என்று.

**கேள்வி:** பல்கலைக்கழகம் என்பது?

**மாணவி:** எங்களுக்கு தெரியாத பல விடயங்களை அறிந்து கொள்ள முடிந்தது.

**கேள்வி:** கல்வி, யாழ்ப்பாணம் ஆகிய இரண்டும் இணையும் போது எனக்கு ஒரு பாடல் நினைவுக்கு வருகிறது. (கேள்வி கேட்பவர் ஒரு பாடலை ஒலிபரப்பு செய்கிறார்) உங்களுக்கும் ஞாபகம் வருதா என்று பாருங்கள்.

பாடல்:

*“வடக்கு எல்லையிலிருந்து வரும் காற்றிலே ....!*
*கொழுந்துவிட்டு எரியும் மடு மாதாவே (தேவாலயம்)*
*கண் இமை ஓரத்தில் கண்ணீரை மறைக்கும்*
*சரோஜா என் மகளே...*
*வெடி ஓசையால் உனது சின்னஞ் சிறிய*
*எழுத்துக்கள் கோணிப்போக*
*என்ன நான் செய்வது மகளே*
*ஆசிரியை நான் மாணவி ஆவாய் நீ*
*ஆனபோதும் நாம் ஒரு வகுப்பிலே*
*கழுத்தின் மேல் கைகள் போட்டு சிரித்த*
*உனது சின்னஞ் சிறிய நண்பர்கள் எங்கே..*
*கருணை இல்லாத உலகைக் கண்டு*
*எல்லையை விட்டு அவர்களோ தொலைவிலே*
*முகாமில் இருக்கும் அப்பா*
*கனவில் வந்து கைகளை நீட்டும் வரை*
*யாருக்கும் நீ உருத்தவில்லை மகளே*
*அதுவரை உன்னை யார் அன்பாய்*
*அரவனைப்பாரோ என் மகளே*
*குழந்தைகள் அழும் குரலில்*
*மாளிகை கதவுகள் உன்னை அழைக்கும்*
*இல்லை, கைகளில் துவக்குகள் ஏந்த*
*எல்லை மதிலோ உன்னை அழைக்கும்*
*கொள்கலத்தில் உன்னை தனியாய் விட்டு*
*எப்படிச் செல்வேன் மகளே*
*தவிர்க்க முடியா சூழ்நிலை என்னை*
*போவென விரட்டுது மகளே*
*இறுதியில், ஒருமுறையாவது உன் முகம் காட்டி*
*சிரித்திடு என் மகளே”*

**மாணவி:** ஓம்.

**கேள்வி:** யுத்தம் முடிவடைந்து ஒன்று,

ஒன்றரை வருடம் முடிவடைய முதல் நீங்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் செல்கிறீர்கள். தவறான முடிவாக தெரியவில்லையா?

**மாணவி:** இல்லை. எங்களுக்கு நிறைய ஆதரவு தந்தார்கள். நான் தங்கியிருந்த வீட்டில் இருந்த அக்கா தனது இரண்டு குழந்தைகளையும் எங்களிடம் தான் தந்துவிட்டு செல்வார் பார்த்துக்கொள்ள சொல்லி, அந்த அளவு நம்பிக்கை, அதே போல எமக்கும் நல்ல ஆதரவாக இருந்தார். அந்த அக்கா இறந்திட்டார், இறந்த பின் அந்த அக்காவை பல நாட்களாக நான் கனவில் கண்டேன், அந்தளவுக்கு நான் அதிர்ச்சியடைந்தேன், எனது சகோதரி போல உணர்ந்தேன், நான் நினைக்கின்றேன் நாங்கள் இன ரீதியாக பிளவுபடக்கூடாது, நாங்கள் எல்லோரும் ஒற்றுமையாக அளவுகளை கைவிட்டு மக்களை மட்டும் கருத்தில் கொண்டு வாழ முடியும் என்றால் இதைவிட நன்றாக இருக்கும்.

**கேள்வி:** உண்மையை கூறுங்கள் யாழ்ப்பணம் செல்ல பயம் வரவில்லையா?

**மாணவி:** அங்குள்ள விரிவுரையாளர்கள் மிகவும் நல்லவர்கள். தமிழர், சிங்களவர் என்ற பிரிவு காட்டவில்லை, எனது விரிவுரையாளர் துவிச்சக்கர வண்டியில் தான் வருவார். அவர்களிடம் இருந்து கற்றுக்கொள்ள நிறைய உள்ளது. உடைகளை பற்றிய கவலை எல்லாம் நமக்கு இருக்கவில்லை. கையில் கிடைக்கும் ஆடைகளை அணிந்து கொண்டு செல்லமுடிந்தது. நிறைய சுதந்திரம் நமக்கு கிடைத்தது. அங்குள்ள மக்களும் சாதாரணமானவர்கள். உண்மையில் எனக்கு கொழும்பு செல்ல பயம். (கேள்வி கேட்பவரின் கண்கள் ஆச்சரியத்தில் மேலெழும்புகின்றன) யாழ்ப்பாணத்தில் எங்கு வேண்டும் என்றாலும் செல்ல முடியும், எந்தப் பயமும் இல்லை.


சிங்கள மொழியிலான தொலைக்காட்சி வீடியோ இணைப்பு: https://www.youtube.com/watch?v=QBINqRPp9_Y

# தமிழ் தேசியக்கூட்டமைப்பு எம்.பியின் குட்டு நாமலால் அம்பலம்

**நெ**டுஞ்சாலைகள் போக்குவரத்து அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் 08.12.2020 அன்று நாடாளுமன்றத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், அரசாங்கத்தின் ஒரு கிலோமீற்றர் பாதை அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ், அம்பாறை மாவட்டத்தில் ஒரு கிலோமீற்றர் பாதைக்குகூட செப்பனிடப்படவில்லை எனக் குற்றஞ் சுமத்தினார்.

மேலும், அம்பாறை மாவட்ட கிராமப் பிரதேசங்கள், அபிவிருத்திப் பணிகளில் புறக்கணிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி உரையாற்றிய அமைச்சர் நாமல் ராஜப்க்ஷ, “2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் நாட்டில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திப் பணிகளை, அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கம் தடுத்து நிறுத்தியிருந்தது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள வீதிகளை உள்ளடக்கியே, ஒரு



இலட்சம் கிலோமீற்றர் பாதை அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படும். எந்தவொரு விதத்திலும், வடக்கு, கிழக்கில் அபிவிருத்திப் பணிகளை புதிய அரசாங்கம் கைவிடவில்லை.

2015ஆம் ஆண்டுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகளை, தற்போதைய அரசாங்கம் தொடர்ந்து முன்னெடுக்கும்'' என்றார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், “தவராசா கலையரசன் கூறுவது என்னவென்றால், இவரது பிரதேசத்தில் ஒரு இலட்சம் கிலோமீற்றர் காபட் பாதை அபிவிருத்தித் திட்டம் அரசியல் ரீதியாகவே முன்னெடுக்கப்படுகிறது. எனவே, இவரது பிரதேசத்தில் உள்ள பாதைகளில், 10-15 கிலோமீற்றர்களையேனும் புனரமைத்துத் தாருங்கள்'' என்றார்.

சார்ள்ஸ் நிர்மலநாதனின் கருத்துக்கு பதிலளித்த அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, “பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்திக்க வரும்போது, நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசனையும் அழைத்து வாருங்கள். அப்போது பிரதமர் அதனை செய்துகொடுப்பார். தனியாக வரவேண்டாம். அவரையும் அழைத்து வாருங்கள'' என்றார்.

**-பா.நிரோஸ், தமிழ்மிரர்**

பிற்குறிப்பு: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பகிரங்கமாக ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சியுடன் மாத்திரமே உறவு வைத்துக் கொள்வோம் என்று சொல்லிக் கொண்டாலும், அக்கட்சியில் சிலர் இரகசியமாக ராஜபக்ஷ அரசுடனும் நல்ல உறவைப் பேணி வருகின்றனர்.

தேசியப் பிரச்சனைகளானவை பாட்டாளிவர்க்கத்தின் பெரும்பகுதியினரை சமூகப் பிரச்சனைகள், வர்க்கப் போராட்டப் பிரச்சனைகளிலிருந்து திசைதிருப்புகின்றன. அவை முதலாளிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் ‘பொதுவான’ பிரச்சனைகளில் கவனம் செலுத்தச் செய்கின்றன. தேசிய இனப்பிரச்சனைகளை பயன்படுத்திக்கொள்ளும் முதலாளித்துவ வர்க்கம், தொழிலாளி வர்க்க ஒற்றுமையை இரத்தத்திலும் கண்ணீரிலும் மூழ்கடிக்கச் செய்யும். எனவே இவ்விசயத்தில் சரியான புரிதலுடன் கூடிய சரியான எதிர்வினை மிக மிக அவசியமாகும்.

சோசலிசக் கவசத்தால் பாதுகாக்கப்பட்ட தேசிய இனவாதம் தொழிலாளர்கள் மத்தியிலே வேரூன்றும்போது நச்சுக் கருத்துக்களைப் பரப்புகிறது. பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த தொழிலாளர்களிடையே நம்பிக்கையின்மையையும், பிளவுறும் தன்மையையும் உருவாக்கும் ஆபத்தான கருத்துக்களையும் படரவிடுகின்றது.

**-ஸ்டாலின்**

# பேராசிரியர் கைலாசபதி ஒரு மானுட ஆவணம்

**டி**சம்பர் 6ஆ திகதி பேராசிரியர் கைலாசபதி அவர்களது 38வது ஆண்டு நினைவு தினத்தை நினைவுகூருமுகமாக, எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் ***பாரதி தீட்சண்யா*** எழுதிய இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.



சோஷலிசத்தின் இலக்கு மனிதன் தான். தனிமனிதனின் சுதந்திர வளர்ச்சியானது அனைத்து மனிதர்களின் சுதந்திர வளர்ச்சியோடு பின்னிபிணைந்துள்ளது. இத்தகைய மனித குலத்தின் இலட்சியத்தை தமது எழுத்தாலும், நடைமுறையாலும் செயற்படுத்த முனைந்த கைலாசபதி பற்றி சிந்தித்த போது மேற்குறித்த வரிகள் நினைவில் நிலைத்து நிற்கின்றன.

இருபதாம் நூற்றாண்டு பெற்றுத் தந்த தலை சிறந்த ஆய்வு அறிஞர்களில் கைலாசபதியும் ஒருவர். கால் நூற்றாண்டு தமிழியல் வரலாற்றில் தனித்துவமான ஆளுமைச் சுவடுகளைப் பதித்த அவர் பத்திரிகையாளர், எழுத்தாளர், விமர்சகர், விரிவுரையாளர் — பேராசிரியர், முதலாவது யாழ் வளாகத் தலைவர், கலைப்பீடாதிபதி என பல்துறைச் சார்ந்த ஆளுமைகளை தன்னகத்தே கொண்டிருந்தார். இத்தகைய சமூதாயம் சார்ந்த அவரது ஆளுமைகளே அவரை சிறந்ததொரு முன்மாதிரியாக கொள்கின்ற போக்கு வளர்வதற்கு காரணமாக அமைந்தது.

கைலாசபதியின் எழுத்துக்கள் கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் பல்வேறு பதிப்புகளாக வெளிவந்துள்ளன என்பது உண்மையே. ஆயினும் அவரது எழுத்துக்கள் அனைத்தையும் உள்ளடக்கிய அடக்க பதிப்பொன்று இதுவரை வெளிவராமை சிந்தனைக்குரியதே. அவ்வாறே கடந்த காலங்களிலும் இன்றைய நாளிலும் கைலாசபதியின் பங்களிப்பு குறித்த ஆக்கபூர்வமான முழு நிறைவான ஆய்வுகள் இதுவரை வெளிவரவில்லையாயினும் குறிப்பிடத்தக்க சில ஆய்வுகள் பிரசுரமாகியுள்ளன என்பதும் மனங்கொள்ளத்தக்கதாகும். அவ்வாறு குறிப்பிடத்தக்க கட்டுரைகள், நூல்கள் சிலவற்றை முற்போக்கு மார்க்ஸிய முகாமைச்சார்ந்த அறிஞர்களாலேயே எழுதப்பட்டவை. இவ்வெழுத்து முயற்சிகள் பெரும்பாலும், இலக்கியகதியில் கைலாபதியின் எழுத்துக்கள், செலுத்தும் முக்கியத்துவத்தையும் அவற்றின் தாக்கங்களையும் இவர்கள் செவ்வனே உணர்ந்து எழுதியுள்ளனர். குறுகிய வரம்புகளை கடந்து தேசிய சர்வதேசிய நோக்கில் அவ்வாய்வுகள் வெளிவந்துள்ளமை அதன் பலமான அம்சமாகும்.

இலக்கிய வரலாற்றினை ஊன்றிக் கவனிக்கின்ற போது ஒரு உண்மை தலைத் தூக்குவதை காணலாம். அது தான் இலக்கியத்திற்கும் சமூதாயத்திற்கும் இடையிலான உறவுக் குறித்த பிரச்சனையாகும். இலக்கியத்தின் நித்தியத்துவம் குறித்து காலத்திற்கு காலம் வாதப் பிரதிவாதங்கள் தோன்றிய வண்ணமே உள்ளன. கலை, இலக்கியம் என்பது தெய்வீகத் தன்மை வாய்ந்தது எனவும், அது தெய்வ திருவுடைய கலைஞரால் படைக்கப்படுகின்றது எனவும் பிரமைகள் கற்பிக்கப்படுகின்றன. இப்பார்வையானது, ஒரு புறத்தில் பரந்துப்பட்ட வெகுஜனங்களையும் மறுப்புறத்தில் இலக்கிய கர்த்தாவையும் வைத்து நோக்குகின்ற வெகுசஜன விரோத பண்பாடாகும்.

இன்னொரு புறத்தில் தேசிய, பிரதேச, இன, மொழி, சாதி, மத அடையாளங்களைக் கொண்டு மனிதகுல விடுதலைக்கு எதிராக பாவிக்கின்ற கபடத்தனங்கள் இலக்கியத்தில் நிலை நிறுத்தப்படுகின்றன. "கல்தோன்றி மன்தோன்றா காலத்திற்கு முன்னரே வாலோடு தோன்றியது மூத்த தமிழ்", "குறித்த இனம், சாதி பற்றிய படைப்புகளை அவர்களால் மட்டுமே உருவாக்க முடியும்" போன்ற வாதங்களை உற்று நோக்குகின்ற போது இவ்விலக்கிய போக்கின் தாக்கங்களைக் காணமுடிகின்றது. பராம்பரிய மரபுகளை அப்படியே ஏற்றுக் கொண்டு அதனை தமது வர்க்க நலன்களுக்கு ஏற்றவகையில் விளக்கமளிக்கின்ற பண்டிதர்கள் ஒரு புறத்தில் ஆர்பரித்து நிற்க,மறுப்புறத்தில் பாராம்பரிய மரபுகள் யாவும் ஆதிக்க சக்திகளின் நலனையே பிரதிப்பலிக்கின்றன என அவற்றை மறுத்து தூய பாட்டாளி வர்க்க கலைக்கோட்பாட்டை முன்வைக்கின்ற அதி தீவீரவாதிகள் இன்னொரு புறத்தில் ஆர்பரித்து நிற்பதே யதார்த்தமாகி விட்டதோர் சூழலைக் காணக் கூடியதாக உள்ளது.

கலை, இலக்கியம் என்பது சமுதாயத்திலிருந்து தோன்றி அது சமூதாயத்தை மேம்படுத்துகின்றது என்ற இலக்கிய போக்கானது மனிதனையும் அவனது செயற்பாடுகளையும் ஆக்கப்பூர்வமான திசையில் இட்டுச்

செல்கின்றது. "மனிதர் உணவை மனிதர் பறிக்கும்" வழக்கத்தை மாற்றி புதிய சமூதாயத்தை நிர்மாணிக்கும் எண்ணுக்கணக்கற்ற விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள் புத்தி ஜீவிகள் இன்னும் இத்தகையோரின் போராட்டகளில் வலிமை மிக்க ஆயுதமாக கலையும் இலக்கியமும் விளங்குகின்றது என்பது மக்கள் இலக்கிய கர்த்தக்களின் நிலைப்பாடாகும். அந்த வகையில் இவ்வணியினர் பாரம்பரிய மரபுகளை ஒடுக்கும் வர்க்க மரபுகள் ஒடுக்கப்படும் வர்க்க மரபுகள் என கண்டறிந்து அவற்றினை சமூகமாற்றப் போராட்டத்திற்கு ஏற்றவகையில் ஒழுங்கமைத்துக் கொள்ளும் அணுகு முறையை இவர்கள் முன்மொழிகின்றனர்.

கைலாசபதி இந்த மூன்றாவது அணியினையே சார்ந்து நின்றார். அவர் வாழ்ந்த காலப்பகுதில், நமது கலாசாரம், பண்பாடு, பாரம்பரியம், இலக்கியத்தில் மக்கள் சார்பு பண்பு என்பன கடும் சோதனைக்குட்பட்டிருந்த காலமாகும். இத்தகைய காலச் சூழலில் தமது எழுத்தால் செயற்பாட்டால் மக்கள் சார்பு இலக்கிய கோட்பாட்டினை நிலை நாட்டியதில் கைலாசபதியின் பங்களிப்பு முக்கியமானது. எனவே கைலாசபதியின் இலக்கிய, அரசியல் கொள்கை நடைமுறை, அதன் செல்வாக்கு என்பவற்றினை ஆராய்தல் வேண்டப்படுவதாகும்.

கைலாசபதி 1933 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் பிறந்தார். இவரது தந்தையின் பெயர் இளையத்தம்பி கனகசபாபதி. தாயாரின் பெயர் தில்லைநாயகி நாகமுத்து. யாழ்பாண சமூகத்தை சேர்ந்த கைலாசபதியின் பெற்றோர்கள் தமது தொழில் நிர்ப்பந்தம் காரணமாக மலேசியாவில் சில காலம் வாழ்ந்தனர். இவரது தந்தை அங்கு படவரைஞராகப் பணிப்புரிந்தவர்.

கைலாசபதி மலேசியாவில் விக்டோரியா இன்ஸ்டிடியூட்டில் தமது ஆரம்ப கல்வியை கற்றார். இரண்டாம் உலக யுத்தத்திற்கு பின்னர் 13வது வயதில் இலங்கைக்கு திரும்பினார். பின், தமது இடைநிலைக் கல்வியை யாழ். இந்துக் கல்லூரியிலும் உயர்தரக் கல்வியை கொழும்பு றோயல் கல்லூரியிலும் கற்று, பட்டப் படிப்பினை இலங்கை பல்கலைகழகத்திலும் (பேராதனை வளாகம்) கற்றார். பேராதனை பல்கலைக்கழகத்திலயே தமது முதுமாணி பட்டத்தினையும் பெறறார். பின்னர் கலாநிதி பட்டத்தினை இங்கிலாந்திலுள்ள பர்மிங்ஹாம் பல்கலைகழகத்தில் முடித்தார்.

கைலாசபதிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் கற்றுக்கொண்டிருந்த காலப்பகுதியில் மார்க்சியத் தத்துவ அறிமுகம் கிடைத்தது. அத்தத்துவத்தின் ஒளியிலேயே அவர் தமக்கான சமூக நோக்கையும் உலக கண்ணோட்டத்தையும் பெற்றுக் கொள்கின்றார். "வளரும் பயிரை முளையிலே தெரியும்" என்பதற்கமைய பள்ளி பருவம் முதலே தமக்கான பார்வையை தெளிவாகவும் தீட்சண்யத்துடனும் வளத்துக் கொள்கின்றார். இது குறித்து கைலாசபதிக்கு மார்க்சிய தத்துவார்த்த பார்வையை வளம்படுத்தியவர்களில் ஒருவரான மு. கார்த்திகேசனின் பின்வரும் வரிகள் கவனத்தில் கொள்ளத்தக்கது. "எனது வகுப்பு மாணவர்களில் பலர் பரலோகம் செல்வதற்காகச் சுலுவான வழியைக் கண்டுப் பிடித்தார்கள். அவர்களிடம் தேவாரம், திருவாசகம், பைபிள், குர்ஆன் இருக்கும். அவர்களுள் வித்தியாசமாக ஒரு மாணவன் இருந்தான். அவன் சமூக விஞ்ஞான நூல்களை வைத்துக் கொண்டு பூலோகத்தை பார்க்கத் தலைப்பட்டான். அவர்களோ வானம் பார்த்த பரலோக வாதியானார்கள். இவனோ பரலோகம் பார்த்த சமூகவிஞ்ஞானியானான். அந்தச் சுட்டி மாணவன் தான் கைலாசபதி."

கைலாசபதி தமது பாடசாலை பருவத்திலே சிறுகதை, கவிதை, நாடகம், இசை என பல் துறைகளில் ஆர்வம் கொண்டிருந்ததுடன் பல ஆக்கங்ககளையும் எழுதியுள்ளார். அக்காலத்தில் தமிழ்மணி, இந்துசாதனம், சுரபி, யுகம், வீரகேசரி முதலிய இதழ்களிலும் அவரது ஆக்கங்கள் பிரசுரமாகியுள்ளன. இவர் எழுதிய நாடகங்கள் பல இலங்கை வானொலியில் ஒலிபரப்பு செய்யப்பட்டுள்ளன. இவ்வகையில் கைலாசபதியின் பல பரிசோசனை முயற்சிகளினூடாகவே தமக்கான விமர்சனத் துறையை தேர்ந்தெடுத்துள்ளார் என்பதை அறிய முடிகின்றது.

கைலாசபதி பல்கலைகழகத்தில் மாணவராக கற்கைநெறியை தொடர்ந்திருந்த காலத்தில் பேராசிரியர்கள் க.கணபதிபிள்ளை,வீ.செல்வநாயகம், சு.வித்தியாணந்தன் முதலாலோனரிடம் கற்க கூடியதும் அவர்களுடன் சேர்ந்து சமூக செற்பாடுகளை முன்னெடுக்க கூடியதுமான வாய்ப்புகள் கிடைக்கப்பெற்றார்.

1957 ஆம் ஆண்டு தமிழை சிறப்பு பாடமாக கொண்டு பயின்ற கைலாசபதி முதலாம் வகுப்பில் சித்தியடைந்தார். இந்த தகைமையை பயன்படுத்தி அவர் வெளிநாட்டு புலமைப் பரிசில் பெற்றோ அல்லது வேறு நிருவாக துறைசார்ந்த பதவிகளிலோ பிரகாசித்திருக்க முடியும். கைலாசபதி அவ்வாறு செய்யவில்லை. மறாக தனது துறைக்கான களமாக பத்திரிகை துறையை தேர்ந்தெடுத்துக் கொண்டார். தினகரன் பத்திரிகையில் முதலில் உதவி ஆசிரியராகவும் பின்னர், மிக குறுகிய காலத்திலேயே பிரதம ஆசிரியராகவும் நியமிக்கப்பட்டார்.

1961 இல் கைலாசபதி பத்திரிகைத் துறையிலிருந்து விலகி பேராதனைப் பல்கலைகழகத்தில் உதவி விரிவுரையாளராக நியமனம் பெற்றார். இந்த சூழலை கைலாசபதி தமது தமிழியல் ஆய்வுத் துறை விருத்திக்கு சாதகமானதோர் களமாக பயன்படுத்திக் கொண்டார்.

1963 ஆம் ஆண்டளவில் தமது கலாநிதி பட்டபடிப்பிற்காக புலமைப் பரிசில் பெற்று இங்கிலாந்தில் உள்ள பர்மிங்ஹாம் பல்கழகத்திற்கு சென்றார். இக்காலத்தில் அவரது மார்க்சிய பார்வையை வளம்படுத்தியதில் பேராசிரியர் ஜோர்ஜ் தொம்சன் முக்கியமானவர். இவரது மேற்பார்வையின் கீழ் Tamil Heroic Poetry என்ற ஆய்வேட்டினை சமர்பித்தார். தக்க ஆதாரங்களுடனும் சமூதாய கண்ணோட்டத்துடனும் சங்க செய்யுள்களை கிரேக்க வாய்மொழி இலக்கியங்களுடன் ஒப்பு நோக்கி, அப்பாடல்களின் பரவுத் தன்மை, மக்களின் எழுத்தறிவு, அவற்றின் உள்ளடக்கம், வடிவம் என்பனவற்றினை ஆதாரமாகக் கொண்டு சங்ககால செய்யுள்களை வாய்மொழி இலக்கியம் என நிறுவினார். இவ்வாய்வு முயற்சி, தமிழில் சங்க இலக்கியம் குறித்து புதிய பார்வைகளும் ஆய்வுகளும் தோன்ற ஆதர்சனமாக அமைந்தது.

இதே காலப்பகுதியில் (1964) தனது மாமன் மகளான சர்வமங்களத்தை திருமணம் செய்துக் கொள்கின்றார். இருவருக்கும் சுபமங்களா (1968), பவித்ரா (1968) ஆகிய இரு புதல்விகள் உள்ளனர். கைலாசபதியின் ஆய்வு சார்ந்த பணிகளுக்கு திருமதி சர்வமங்களத்தின் பங்களிப்பு விலைமதிப்பற்றது. கைலாசபதியின் ஆய்வுப்பணிகளுக்கு சர்வமங்களம் எத்தகைய பங்களிப்பினை நல்கியுள்ளார் என்பதை அவரது வார்த்தைகளில் காண்பது பயன்மிக்கது.

"கைலாசுக்கு சோர்வு என்பதே கிடையாது. புத்தகம் படிப்பார். நண்பர்களுடன் இலக்கிய விவாதம் செய்வார். இரவிரவாக எழுதுவார். ஒரு மணி இரண்டு மணிக்கு முன்னர் அவர் படுத்ததில்லை. நல்ல ஒரு மாணவரைப் போல இடைவிடாது உழைத்தார். அடுத்த நாள் காலை ஒரு பரீட்சை எழுத வேண்டும் என்பதுபோலவே

நடந்து கொள்வார். அவர் இரவிரவாக எழுதியதை அது ஆங்கிலமாக இருந்தால் நான் தட்டச்சு செய்து வைப்பேன். அது தமிழ் என்றால் அதை நான் நல்ல எழுத்தில் திருப்பி எழுத வேண்டும். அத்துடன் வேலை முடியாது. திருப்பி படிக்கும் போது புதுபுது எண்ணங்கள் முளைக்கும். என்னிடம் sorry, sorry என்று மன்னிப்புக்கேட்டபடி நட்சத்திரகுறி போட்டு வேறு ஒற்றையில் A,B,C என்று எழுதி வைப்பார். நான் அவற்றையெல்லாம் கட்டுரையில் சேர்த்து திரும்பவும் எழுத வேண்டும். ஆரம்பத்தில் ஆறு பக்க கட்டுரையாக இருந்தது, முப்பது பக்கமாக மாறிவிடும்."

கைலாசபதியின் வீட்டில் எப்போதும் எழுத்தாளர்கள் இலக்கிய ஆர்வலர்கள் கூடுவது வழக்கம். அவர்களுக்கான விருந்துபசாரங்களை செய்வதிலும் சர்வமங்களம் முக்கிய கவனம் செலுத்தியுள்ளார் என்பதனையும் பலர் பதிவு செய்துள்ளனர். அத்துடன் கைலாசபதி தமது இறுதி காலத்தில் பாரதி பற்றி நூல் எழுதும் முயற்சியிலும் ஈடுப்பட்டுள்ளார். அவ்வாறே அவரது சீன பயணத்தின் பின்னர் நீர்வை பொன்னையன், இ.முருகையன், எம். ஏ. நு:ஃமான் ஆகியோருடன் இணைந்து, லுசுன் பற்றி நூலெழுதும் முயற்சியிலும் ஈடுப்பட்டுள்ளார் என்பதையும் அறிய முடிகின்றது. பல்கலைகழக சார்ந்த பணிகளுடன் மட்டும் கைலாசபதி தம்மை மட்டுப்படுத்திக் கொள்ளவில்லை. அவர் பல்கலைக்கழகத்திற்கு அப்பாலும் பல பொறுப்புகளை வகித்துள்ளார். யுனெஸ்கோவுக்கான தேசிய ஆணைக்குழு (1970), இலங்கைப் பாடநூல் ஆலோசனைக் குழு, இலங்கை பல்கலைகழக மக்கள் தொடர்பு ஆய்வுக் கழகம் (1971-74), இலங்கை வானொலி தமிழ் நிகழ்ச்சி ஆய்வுக்குழு (1973) என பல பணிகளை மேற் கொண்டுள்ளார்.

1974 இல் யாழ்.பல்கலைக்கழக வளாகம் ஸ்தாபிக்கப்பட்ட போது அதன் முதலாவது வளாகத் தலைவராக பேராசிரியராக நியமிக்கப்பட்டவர் கைலாசபதி. யாழ். பல்கலைக்கழகம் உருவாக்குவதற்கு எத்தகைய முயற்சிகளை மேற்கொண்டாரோ அவ்வாறே அது உருவாகிய பின்னர் அதன் இலக்கினை அடைவதற்காகவும் தன்னால் முடிந்த முயற்சிகளை மேற்கொண்டார்.

1977 இல் கைலாசபதிக்கு தமது வளாகத் தலைவருக்கான பதவி காலம் முடிந்ததுடன் அவர் அதே பல்கலைகழகத்தில் பேராசிரியராக கடமையாற்றினார். அக்காலப் பகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தோல்வியடைந்து ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக்கு வந்திருந்தது. இக்காலத்தில் கைலாசபதி தாங்கொனாத் துன்பங்களை அனுபவித்துள்ளதை திருமதி. சர்வமங்களம், செ. கணேசலிங்கன் முதலானோரின் குறிப்புகளில் காணக் கூடியதாக உள்ளது.

மேலும், கைலாசபதி இந்திய பல்கலைக்கழகங்களிலும் உயர்கல்வி நிறுவனங்களிலும் மற்றும் அயோவா, கலிபோர்னியப் பல்கலைக்கழகளிலும் வருகை தரு அதிதி பேராசிரியராக கடமையாற்றியுள்ளார். இத்தகைய ஆளுமை உள்வீடுகளை கொண்டிருந்த கைலாசபதி, 1982 இல் டிசம்பர் மாதம் ஆறாம் திகதி தான் சிந்திப்பதை நிறுத்திக் கொண்டார். இவரது இழப்பு இருபதாம் நூற்றாண்டுத் தமிழியல் ஆய்வுத்துறையில் ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

கைலாசபதி பாடசாலை மாணவராக இருக்கும் காலம் முதலே பல வகை நூல்களை வாசிக்க தலைப்பட்டிருந்தார். அக் காலத்தில் பொதுமக்களிடையே பெரும் செல்வாக்கு பெற்றிருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தாரின் வெளியீடுகளான 'கம்பரசம்', 'ஆரிய மாயை', 'தீ பரவட்டும்', 'நாடும் ஏடும்', 'நிலையும் நினைப்பும்', 'பரமசிவனுக்கு பகிரங்க கடிதம்', 'பரந்தாமனுக்கு பகிர்ந்த கடிதம்' முதலிய நூல்களை வாசிப்பதில் ஆர்வம் காட்டிருந்தார். அவ்வாறே, பாரதிதாசன் , புதுமைபித்தன், ரகுநாதன், மு.வரதராஜன் சுத்தானந்த பாரதி, ச.து.சு. யோகியார். முதலியோரின் ஆக்கங்களை வாசிப்பதிலும் கூடிய ஆர்வம் காட்டி வந்திருப்பதை கவிஞர் இ.முருகையனின் நினைவுக் குறிப்புகளில் காண முடிகின்றது.

மேலும் கைலாசதிக்கு பாடசாலை மாணவராக இருந்த காலத்தில் தமிழில் எவ்வாறு தேர்ச்சி பெற்றவராக காணப்பட்டாரோ, அவ்வாறே ஆங்கில மொழியிலும் புலமை மிக்கவராக காணப்பட்டார். சில ஆங்கில இலக்கிய விமர்சகர்களின் நூல்களை வாசிப்பதில் அவர் தீவிர கவனமெடுத்துள்ளார் என்பதை அவரது எழுத்துக்களில் காணக்கூடியதாக இருக்கின்றது. குறிப்பாக எலியற், எ:ஃப்.ஆர்.லீவிஸ், சிசில் டேய் லூயி, ஸ்ற்றீ:ஃபன், ஸ்பென்டர், முதலிய விமர்சகர்களும் டி.எச். லோறன்ஸ், பேணாட் ஷோ, ஜேம்ஸ்ஜோஸ், வேஜினியா வூல்:ஃப், ஷேக்ஸ்பியர், மாக்ஸிம் கார்க்கி மாயாகோல்ஸ்கி, ஏஸ்ட்ராவ்கி, பெட்டோ:ஃபி, லூசுன், பெர்ட்டோல் பீரெஸ்ட், நெருடா முதலிய படைப்பாளிகளும் கைலாசபதியினால் வாசிக்கப்பட்டவர்கள் என்பதனை அவரது எழுத்துக்களின் ஊடாக அறிய முடிகின்றது. இவ்வாறு வாசிப்பதில் மட்டுமன்று அதனை நண்பர்கள் மாணவர்கள் மத்தியில் கலந்துரையாடுவதிலும் கைலாசபதி ஆர்வம் காட்டியிருந்தார். நண்பர்களுக்கு எழுதுகின்ற கடிதங்கள், ஒருவகையில் அவை கூட ஒரு சமுதாயம் சார்ந்ததாக இலக்கியம் குறித்த உரையாடலாகவே அமைந்துள்ளது.

1953 இல் பதுளையை சேர்ந்த தனது கல்லூரி நண்பனுக்கு எழுதிய கடிதம் பொறுத்து என். கே.ரகுநாதன் இவ்வாறு சுட்டிக்காட்டுகின்றார்:

"சொந்தவிவகாரங்கள் ஏதுமில்லை. படித்த இலக்கிய புத்தகங்களிலிருந்து குறிப்புகள், விஷேட ரசனைகள், பல புத்தகங்களைப் பற்றி அறிமுகக் குறிப்புகள்- ஆங்கில நூல்கள் உட்பட சிங்காரம் சொல்வார்: நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்து வீட்டு, விரைவில் முடித்துக் கொண்டு ஏதாவதொரு குறைப்புத்தகத்தைப் படிக்க ஓடி விடுவாராம். கடிதங்களிலும் அந்தப் புத்தகம் கிடைத்துள்ளது: இந்தப் புத்தகம் வாங்க வேண்டும்: படித்த பின் அதையிட்டு எழுதுகின்றேன்- இப்படியெல்லாம், பிற்கால இலக்கிய ஆதர்சங்களுக்கு அப்போது அடிகோலினார் போல் தெரிகிறது"

இவ்வாறு பல்வேறு நூல்களை கற்று தேர்ந்த கைலாசபதி வாழ்விலிருந்து அந்நியப்பட்டு விடாமலும் தொலைத்தூர தீவுக்குள் ஒதுங்கி விடாமலும் தன் சரித்திர தூரிகையை நகர்த்தி சென்றுள்ளமை அவரது சிந்தனைத் தெளிவினை காட்டுகின்றது. தான் பெற்ற அறிவை மாறி வருகின்ற சூழலுக்கு ஏற்ப, தமிழ் மரபுக்கு ஏற்ப பொருத்தி பார்த்து எமது சூழலுக்கான விமர்சப் பார்வையொன்றை உருவாக்கி, புத்தகவாத சிந்தனைக்கப்பால் நடைமுறைக்கான செயற்திறனை வலியுறுத்துகின்ற பண்பை அவரது எழுத்துக்களில் காணக் கூடியதாக உள்ளது.

கைலாசபதி பின்னாட்களில் ஆற்றல் வாய்ந்த விமர்சராக ஆய்வாளராக பிரபல்யம் அடைந்ததனால், அவரை விமர்சகராக ஆய்வாளராக பார்க்கின்ற நிலையே உள்ளது. அப்பார்வை ஒரு விதத்தில் சரியானதும் கூட. அதே சமயம் அவர் தமது ஆரம்ப காலங்களில் கவிதைகள், சிறுகதைகள், சிலவற்றினையும் எழுதியுள்ளார். சுமார். 40 நாடகங்கள் எழுதியுள்ளதாக அறிய முடிகின்றது. அவரது பெரும்பாலான நாடகங்கள் இலங்கை வானொலியில் ஒலிபரப்பு செய்யப்பட்டுள்ளன. நத்தார் பெருநாளையொட்டி 'கல்லறைக்கு எதிரில்' என ஒரு நாடகம் ஆக்கினார். அவ்வாறே புதுமைப்பித்தனின் 'கபாடபுரம்' கைலாசபதியினால் நாடகமாக்கப்பட்டுள்ளது.

**(அடுத்த இதழில் தொடரும்)**

**முன்பக்கத் தொடர்ச்சி...**

முஸ்லீம்களைத் "தொப்பி பிரட்டிகள்" என வையவும் செய்தனர். தமிழரசுக் கட்சியினர் விதைத்த இனவாத விதைகள்தான் புலிகளின் மனங்களில் முளைவிட்டு வளர்ந்து முஸ்லீம் மக்களைப் படுகொலை செய்யும் அளவுக்கு பிற்காலத்தில் இட்டுச் சென்றது.

எனவே, இன்றைய தமிழ் தேசியக் கூட்டமைப்பு, சகோதர இனம் என்ற வகையில் தன்னும் மலையகத் தோட்டத் தொழிலாளரின் 1,000 ரூபா சம்பளப் பிரச்சினைக்கு ஆதரவான முறையில் ஏதாவது நடவடிக்கையில் ஈடுபடும் என எதிர்பார்க்க முடியாது. இந்தப் பிரச்சினையில் அவர்கள் இதுவரையும் ஒரு வார்த்தை தன்னும் பேசாமல் மௌனம் காப்பதிலிருந்து இதைப் புரிந்து கொள்ளலாம்.

இன்றைய நிலையில் மலையகத்தில் செயற்படும் தொழிற்சங்கங்களாலும் இந்தப் பிரச்சினையில் ஒரு சுமூகமான தீர்வை எட்டப்படக்கூடிய சக்தி இருப்பதாகத் தெரியவில்லை. முழு மலையகத் தொழிற்சங்கங்களும் ஓரணியில் நின்று 1,000 ரூபா சம்பளக் கோரிக்கையை முன்வைத்து பொது வேலைநிறுத்தம் ஒன்றில் ஈடுபட்டால் சில வேளைகளில் வெற்றி கிடைக்கலாம். ஆனால் அந்த அளவுக்கு மலையகத் தொழிற்சங்கங்கள் மத்தியில் ஒற்றுமை கிடையாது.

தவிரவும், காலவரையறையற்ற பொது வேலைநிறுத்தத்தில் தொழிற்சங்கங்கள் ஈடுபட்டால் அது உற்பத்தியைப் பாதிக்கும். அதைக் காரணம் காட்டி இப்பிரச்சினையில் அரசாங்கம் தலையிடக்கூடும். சில வேளைகளில் அரசாங்கத் தலையீடு என்பது தொழிலாளர்களுக்குச் சாதகமாக இருக்காமல், தோட்ட முதலாளிமாருக்கு சாதகமான முறையில், அதாவது தொழிற்சங்கங்களின் வேலை நிறுத்தத்தைச் சட்டவிரோதமாக்கி, தோட்டத் தொழிற்துறையை அத்தியாவசிய சேவைகள் என அறிவிக்கும் நிலைக்குக் கொண்டுபோய் விடலாம். ஏனெனில் அரசாங்கம் உற்பத்தி பாதிப்படைந்து பொருளாதாரத்தில் வீழ்ச்சி ஏற்படுவதை ஒருபோதும் விரும்பாது.

எனவே இப்போதுள்ள ஒரேயொரு சாத்தியம், அரசாங்கம் மூலமாக தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தை வலியுறுத்தி சம்மதிக்க வைத்து 1,000 ரூபா சம்பளத்தை வழங்க வைப்பதுதான். தற்போதைய அரசாங்கத்துக்கு நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை இருப்பதால் அரசாங்கம் நினைத்தால் இதைச் செய்ய முடியும்.

1,000 ரூபா சம்பளம் தம்மால் வழங்க முடியாது எனத் தோட்ட முதலாளிமார் வாதிடுவதற்கு அவர்கள் சொல்லும் காரணம், அப்படி வழங்கினால் தோட்டங்கள் நஸ்டமடைந்து இயங்க முடியாமல் போய்விடும் என்பதாகும். அவர்கள் கூறும் இந்தக் காரணம் உண்மைதானா என்பதை ஆராய்ந்து பார்ப்பதும் அவசியமாகும். அப்பொழுதுதான் அவர்கள் கூறுவது போல உண்மையில் தோட்டங்கள் நஸ்டமடைந்து விடுமா அல்லது அவர்கள் ஈட்டும் இலாபத்தில் குறைவு ஏற்படுவதைத்தான் அவர்கள் அவ்வாறு கூறுகிறார்களா என்பது தெரிய வரும்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமல் இழுத்தடித்துக்கொண்டு போவது நல்லதல்ல. இன்றைய வாழ்க்கைச் செலவு உயர்வில் உண்மையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 1,000 ரூபா வழங்கினால் கூட அவர்கள் தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கு அது போதாது. நிலைமை அப்படியிருக்க அவர்களது அத்தியாவசிய கோரிக்கையை உதாசீனம் செய்வது எந்த விதத்திலும் நியாயமானது அல்ல.

போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட வட மாகாணத்தில் கூட தினசரி நாள் கூலியாக 1,500 ரூபா வழங்கப்படுகையில், நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற, பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழ்கின்ற மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் 1,000 ரூபா சம்பளக் கோரிக்கையை எவ்விதத்திலும் தட்டிக் கழிக்க முடியாது. எனவே அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு, வரவு செலவுத் திட்டத்தில் அறிவித்தது போல தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 1,000 ரூபா சம்பளம் கிடைக்க வழி செய்ய வேண்டும்.

இந்த விடயம் மலையக மக்களின், அவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற அரசியல் கட்சிகளின், தொழிற்சங்கங்களின் பிரச்சினை தானே எனக் கருதாமல், நாட்டிலுள்ள அனைத்து முற்போக்கு – ஜனநாயக சக்திகளும் அவர்களின் கோரிக்கைக்கு ஆதரவாகக் குரல் எழுப்ப வேண்டும்.

**16ம் பக்கத்தொடர்ச்சி...**

ரத்வத்த, அண்மையில் நீதி அமைச்சின் ஆலோசனைக் குழு கூட்டத்தின் ஆரம்ப கூட்டத்தில், இந்த நெரிசலைத் தீர்க்க 8,000 கைதிகளை விடுவிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என தெரிவித்தார்.

கைதிகளுக்கு அடிப்படை வசதிகளை அளிக்க வேண்டுமென குணசேகரா கூறினார். ‘‘ஒரு தசாப்தத்திற்கு முன்னர் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சராக கடமைகளை ஏற்று வெலிக்கடை சிறைச்சாலைக்கு நான் சென்ற போது, அங்கு மிக நீண்ட வரிசையொன்றினை நான் கண்டேன். வெலிக்கடைக்கு போதியளவு மலசல கூட வசதிகள் இல்லாததால் இந்த மாதிரியான நீண்ட வரிசைகள் வழமையாதென என எனக்கு கூறப்பட்டது. அத்தகைய வசதிகளை வழங்குவதற்கு முறையான வழிவகை இல்லாத நிலையில், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியை நான் நாடினேன். பல டசின் கழிப்பறைகள் மற்றும் குளியலறைகள் கட்ட தேவையான நிதியை அவர்கள் விரைவாகவே வழங்கினர்’’ என்று குணசேகரா கூறினார்.

மற்றொரு கேள்விக்கு பதிலளித்த முன்னாள் அமைச்சர், பல்வேறு அரசாங்கங்கள் சிறைச்சாலைகள் சீர்திருத்தங்கள் தொடர்பான நான்கு அறிக்கைகளை தயாரித்து வெளியிட்டுள்ளதாகவும், சம்பந்தப்பட்ட இலாகா எனக்கு கிடைத்தவுடன் அவை அனைத்தையும் ஆய்வு செய்ததாகவும் கூறினார் அவ்வறிக்கையில் கூறப்பட்ட பரிந்துரைகளை அர்த்தமுள்ள வகையில் நடைமுறைப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் தனக்கு மறுக்கப்பட்டதாக குணசேகரா தெரிவித்துள்ளார்.

சில அனர்த்தங்களுக்கு பின்னர் ஆணைக்குழுக்களை நியமிப்பது என்பது இன்று ஏதோ சற்று நாகரீகமாகவே உள்ளது என முன்னாள் அமைச்சர் தெரிவித்தார். மஹர கலவரம் என்பது தவிர்த்திருக்க வேண்டிய ஒரு பேரழிவு என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கூறினார். சிக்கலான நிலைமையை ஆராய்ந்து, அனைத்து தரப்பினரதும் கலந்தாலோசனையுடன் தீர்வு நடவடிக்கைகளை எடுக்குமாறு குணசேகரா அரசாங்கத்தை வலியுறுத்தினார். இந்த விடயத்தில் அரசியல் செய்யவேண்டாம், ஆனால் பொருத்தமான ஆலோசனைகளை வழங்குங்களென குணசேகரா எதிர்க்கட்சிகளைக் கேட்டுக்கொண்டார்.

மூலம்: Shamindra Ferdinando,
The Island, டிசம்பர் 9, 2020

**தமிழாக்கம்: வானவில்**

# முன்னாள் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்: கைதிகளை விடுவிப்பதன் மூலம் மாத்திரம் நெருக்கடியைத் தீர்க்க முடியாது

**சி**றைச்சாலைகளில் நிலவும் கொந்தளிப்பான நிலைமையை நிவர்த்தி செய்ய உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டியு குணசேகரா (டிசம்பர் 8ந் திகதி) தெரிவித்தார்.

சமீபத்தில் மஹர சிறை வளாகத்தில் நடந்த இரத்தக்களரி கலவரங்களை குறிப்பிட்டு, கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர், சிறை அமைப்பு தொடர்பான பிரச்சினைகளை குற்றவாளிகளையும் காவலிலுள்ள சந்தேக நபர்களையும் விடுவிப்பதன் மூலம் தீர்க்க முடியாது என்று வலியுறுத்தினார்.

2010–2011 ஆம் ஆண்டில், பல சிரேஷ்ட அமைச்சர்கள் ஓரங்கட்டப்பட்டு அமைச்சரவை மாற்றம் செய்யப்படுவதற்கு முன்னர், குணசேகரா புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சராக பணியாற்றினார்.

சமீபத்தில் தீவிர அரசியலில் இருந்து விலகிய முன்னாள் அமைச்சர், 'தி ஐலண்ட்' (இலங்கையிலிருந்து வெளிவரும் ஓர் ஆங்கிலப்பத்திரிகை) பத்திரிகையின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில், சிறைச்சாலைகளில் அதிகரித்து வரும் அமைதியின்மையை கருத்திலெடுப்பதற்கு பதிலாக, கொரோனா தொற்று நோய் காரணமாக சிறைச்சாலைகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு அரசாங்கம் பதிலளித்து இருப்பதாகத் தெரிகிறதெனக் கூறினார்.

சிறைச்சாலைகளுக்கு பொறுப்பானவர்கள் கைதிகளின உண்மையான குறைகளை இனங்காண வேண்டுமென்று குணசேகர வலியுறுத்தியுள்ளார்.

குறிப்பாக முதலாவது கொரோனா நோய் பரவலின் போது கடற்படை எதிர்கொண்ட நெருக்கடியை அடுத்து, சிறைச்சாலைகளில் கொரோனா தொற்று நோய் பரவலைத் தடுக்க அரசாங்கம் போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும் என குணசேகர தெரிவித்தார்.

பொதுமக்களை ஏமாற்றுவதற்கு முயற்சிகள் இடம்பெற்ற போதிலும், வெலிசறை கடற்படைத் தளத்தில் ஏற்பட்ட கொரோனா நோய் பரவலே உண்மையான



காரணம் என்பதை பகிரங்கத்தளத்திற்கு கொண்டு வந்த 'தி ஐலண்ட்' இற்கு முன்னாள் அமைச்சர் நன்றி தெரிவித்தார். "அந்த கடற்படைத் தளத்தில் எழுந்த ஒரு கொரோனா பிரச்சனையே முன்னெப்போதும் இல்லாத நெருக்கடியை ஏற்படுத்தியது என்பதே உண்மையாகும். இறுதியாக, வெலிசறையில் நிலை கொண்டிருந்த ஆயிரக்கணக்கான படையினரை வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் மற்றும் ஏனைய இடங்களிலுள்ள உள்ள கடற்படைத் தளங்களுக்கும் நகர்த்துவதைத் தவிர கடற்படைக்கு வேறு வழி இருக்கவில்லை" என குணசேகர தெரிவித்தார்.

வெலிசறை நெருக்கடியை 11 பேர்களின் உயிரை பறித்த மஹரவுடன் ஒப்பிட்டுள்ள குணசேகரா, குற்றவாளிகள் மற்றும் காவலிலுள்ள சந்தேக நபர்களின் நல்வாழ்விற்கான பொறுப்பிலிருந்து சிறைச்சாலைகள் அதிகாரிகள் தங்களை விடுவித்துக்கொள்ள முடியாது என்றார்.

"நீதிமன்றங்களால் பாதுகாக்கும்படி கையளிக்கப்பட்டவர்களாக, நீதிமன்றங்களின் பாதுகாவலில் அவர்கள் உள்ளனர" என முன்னாள் அமைச்சர் கூறினார். மஹர எழுச்சியின் போது, கிட்டத்தட்ட 2,800 குற்றவாளிகள் மற்றும் சந்தேக நபர்கள் இருந்தார்கள். அவர்களில் மிகப் பெரும்பாலானவர்கள் சந்தேக நபர்களே.

இந்த நெருக்கடிக்கு பதிலளிக்கும் வகையில், காவல் கைதிகள் மற்றும் குற்றவாளிகளை விடுவிப்பதில் உள்ள நியாயத்தை குணசேகரா கேள்வி எழுப்பினார். அவரது பரிந்துரை என்னவாக இருக்கும் என்று கேட்கப்பட்டபோது, முன்னாள் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர், கைதிகளை விடுவிப்பதன் மூலம் பிரச்சினையை தீர்க்க முடியாது என்று சுட்டிக்காட்டினார்.

சிறைச்சாலைகளைக் காலி செய்வது தான் தீர்வு என்றால், குறிப்பாக போதைப்பொருள் தொடர்பாக மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் காவலிலுள்ள சந்தேக நபர்களின் நிலுவையில் உள்ள விசாரணைகளையும் சட்ட அமுலாக்க அதிகாரிகள் மற்றும் நீதிமன்றங்களும் குறைக்க வேண்டி வரும் என்ற 'தி ஐலண்ட்' பத்திரிகையின் கருத்துடன் குணசேகரா உடன்பட்டுக் கொண்டார்.

சிறைச்சாலைகளை முறையாக மறுமதிப்பீடு செய்வதற்கும், பொது பாதுகாப்பு தேவைகள் என்று அவர் அழைத்ததை பூர்த்தியாக்குவதற்கு அவசியமான இடங்களில் விஸ்தரிப்பதற்கும் குணசேகரா அரசாங்கத்தை வலியுறுத்தினார். சந்தேக நபர்களைத் தடுத்து வைப்பதற்கான உள்கட்டமைப்பு பற்றாக்குறை நிலவுவதால், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பில் மெதுவாக நகர்வது என்பது அரசாங்கத் தரப்பில் ஒரு பெரிய தவறாக அமையலாம் என்பதையும் முன்னாள் அமைச்சர் ஒப்புக் கொண்டார்.

நவம்பர் 2019 - நவம்பர் 2020 காலப்பகுதியில் 72,000 பேர் ஹெரோயின், கஞ்சா மற்றும் செயற்கை போதைப் பொருட்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டாரென பதிவுகளில் இருப்பதாக பொலிஸ் பேச்சளர் டி.ஐ.ஜி அஜித் ரோஹண தெரிவித்துள்ளதாக, பொலிஸ் மற்றும் மதுவரித் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்ட கூட்டு ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் குணசேகரா சுட்டிக் காட்டினார். சந்தேக நபர்களை தடுத்து வைப்பதற்கு நாட்டில் உள்கட்டுமானங்கள் இல்லாவிட்டால், இது ஒரு கடுமையான சட்டம், ஒழுங்கு நிலைமைகளை ஏற்படுத்தும் என கூறிய முன்னாள் அமைச்சர், ஒரு தசாப்தத்திற்கு முன்னதாக, அதாவது யுத்தம் முடிவடைந்த பின்னர் இந்தப் பிரச்சினையை தீர்க்க தவறியமை குறித்து குறிப்பிட்டார்.

சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் கைதிகள் புனர்வாழ்வு அமைச்சர் லோஹன்

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...